★ மே தினம் ★

பட்டப்பகல்—பிணமாகத் தொங்கினர் நால்வர், தூக்கு மேடையில்! துடித்துத் துவண்டு தம் உடலை ஆட்டுவித்த 'உயிர் மூச்சை'க் காற்றில் கலக்க விட்டு விட்டு, சோர்ந்து தொங்கின நான்கு உடல்கள்!

கூடகோபுரங்கள், மாடமாளிகைகள் நிறைந்த சிகாகோ நகரிலே நடந்த இச்சம்பவம்—உலகத்தையே ஒரு உலுக்கு உலுக்கியது! உலகம் முழுதும் இச்சம்பவம் கண்டு வேதனைப்பட்ட அந்த நேரத்தில் வீணை மீட்டின, அமெரிக்க அரசாங்கமும் அங்குள்ள முதலாளித்துவமும்!

அவர்கள் திருடர்களல்ல, கொலைகாரர்களல்ல, கொடுஞ்செயல் எதுவும் செய்யவில்லை—எனினும் தூக்கு மேடையில் தொங்கினர், பிணமாக! உடல் துடிக்கத் தொங்கி உயிரை இழந்தனர்!!

1887 நவம்பர் 11ந் தேதி—உலக வரலாற்றில் ஒரு ஏட்டை இரத்த மயமாக்கியது—உழைப்போர் இதயத்தில் உணர்ச்சியையும், 'உழைக்கிறாய், உத்தமா, மாடுபோல! ஆனால், உழைப்பின் பயன் என்ன! சாவு! அதோ, பார் உங்களிலே நால்வர் பிணமாகத் தொங்குகின்றனர்! உங்களிலே அவர்களும் நால்வர்—அவர்களுக்குத் தூக்கு. பார், பயப்படாமல் பார்! அவர்களுக்குத் தூக்கு!!' என்ற ஆத்திரமயமான வீர நினைவுகளைத் தூண்டிவிட்டது.

"15 மணி நேர வேலை! 12 மணி நேரம் இயந்திரத்துக்கடியிலே! முடியாது, நாங்களும் மனிதர்கள் தான்!" இந்த வீரமுழக்கம் அமெரிக்காவிலே எழும்பியது. "எட்டு மணி நேரம் தான் வேலைசெய்வோம்!" என்ற இக்கிளர்ச்சி 1878ல் அமெரிக்காவில் துவங்கியது, முதல்முறையாக. அன்று முதல், அடிக்கடி இக்கோரிக்கை, பாட்டாளிகள் கூடும் போதெல்லாம் எதிரொலித்தது—

ஒவ்வொரு ஆண்டும், தொழிலாளர்கள் இக்கோரிக்கையை வலியுறுத்தினர்.

பாட்டாளிகளின் உரிமை முழக்கம் கண்ட 'பணம் பெருத்தான்கள்' கேலி பேசினர்—கொக்கரிப்புக் கண்டு எக்களித்தனர்! விளைவு—புயல் வீசியது ஒரு நாள்! பல்லாயிரக்கணக்கான பாட்டாளி மக்கள் சிகாகோ நகரில் கூடி முழக்கமிட்டனர், 'எட்டு மணி நேரமே வேலை செய்வோம்' என்பதாக! ஆர்ப்பாட்டங்கள், பொதுக்கூட்டங்கள் நாடெங்கும் நிகழ்ந்தன. சிகாகோ நகர் அமெரிக்கத் தொழிலாளர்களின் வெற்றி நிலையமாகத் திகழ்ந்தது.

1886 மே மாதம் முதல் நாள்—சிகாகோ நகரில் இடியோசையெனத் தொழிலாளர் முழக்கம் எதிரொலித்தது. ஊர்வலம், ஆர்ப்பாட்டம், வெற்றிமுழக்கம் பெருமிதமான அளவில் நடைபெற்றது.

தூங்கிக் கிடந்த புலியின் உறுமல் கண்ட முதலாளித்துவமும் அரசாங்கமும் பயந்தன! ஏழைகள்—எரிமலையாகிவிட்டனர், என்பதுகண்ட அவர்கள் நடுநடுங்கினர், ஆத்திரமடைந்தனர். எலிகளின் எக்காளம், இது! என்று கூறினர். சிங்கத்தின் குகையில் சுண்டெலிகளின் தொல்லையா? என்று கோபத்தோடு பேசினர். வேண்டாம் போய்விடுங்கள்—வேதனையை வரவழைக்காதீர்கள் என்று இதோபதேசம் செய்தனர்!

மிரட்டல் வார்த்தை, பயமுறுத்தல், இதோபதேசம்—எதுவும் பலிக்கவில்லை! "எட்டு மணி நேரம் வேலை கொடு!" என்று லட்சோப லட்சம் பாட்டாளிகளின் இதய கீதம் எங்கும் எதிரொலித்தது! ஆதிக்கபுரி சிறிது அசைந்தது—விஷயம் விபரீதமாகிவிடுமோ என்று அஞ்சியது. சிறிது நேரம் யோசனை. போலீசுக்கு உத்தரவு!

துப்பாக்கிகள் முழங்கின—பாட்டாளிகளின் படைவரிசையிலே பிணங்கள்—நூற்றுக்கணக்கில்! மே மாதம் முதல் நாள் இரத்தம்—சிகாகோவின் வீதிகளில் உறைந்து கிடந்தது, ஓட வழியில்லாமல்!

சர்க்காரின் கொடுங்கோன்மை உழைப்பாளிகளின் பிணங்கள்—ஒதுங்கிக் கிடந்தோர் உள்ளத்தையும் கொந்தளிக்கச் செய்தது. 'உரிமை நமது, மூச்சு! உழுத்தலை போச்சு!' என்று வீரப் பண் பாடிக்கொண்டு திரண்டனர்-வெற்றி முரசும் ஒலித்தனர்—சிகாகோ கண்டிராத மாபெருங் பொதுக்கூட்டம் சர்க்காரின் போக்கைக் கண்டிக்கக் கூடியது, மே மாதம் நான்காம் தேதி! பாட்டாளிகளின் கிளர்ச்சி வளர்பிறையாவதைக் கண்ட அரசாங்கம் கூட்டத்தைக்கலைக்கப் போலீஸ்படைகளை அணிவகுத்து அனுப்பியது!

திடீரென ஒரு வெடி குண்டு!—அணிவகுத்து நின்ற போலீஸ் கூட்டத்திலே விழுந்தது......ஆத்திரமடைந்த யாரோ 'அதிகாரப்புலி'களின் மீது குண்டு வீசிவிட்டனர்!

கூட்டம் கலைக்கப்பட்டது, கோபாவேசத்துடன். நாடெங்கும் கைதுகள் நிகழ்ந்தன. புலன்விசாரணை நடைபெற்றது. நால்வர், நீதி மன்றத்தின் முன் கொண்டு வந்து நிறுத்தப்பட்டனர். தூக்குமேடை கொண்டு செல்லப்பட்டனர்—பிணமாகத் தொங்க விடப்பட்டனர், 1887 நவம்பர் 11ந் தேதி பகலில்!

சிகாகோ படுகொலை—அகில உலகையும் ஆட்டியது. உழைப்போர்களின் இதயங்கள் குலுங்கின—வேதனை தாங்காது!

1889—பாரிஸ் நகரில் சர்வதேச தொழிலாளர்களின் மாநாடு கூடியது. உழைப்போர் வாழ வழி வகைகள் காணக் கூடிய அம்மாநாட்டில் 'சிகாகோ சம்பவம்' பற்றிப் பேசப்பட்டது. 'எட்டுமணி நேரம் வேலை' என்ற அடிப்படைக் கோரிக்கைக்காக, அமெரிக்க நகரின் வீதியை இரத்தமயமாக்கிய மே தினம் குறித்து ஆலோசித்தனர். அந்நாளை—உலகப்பாட்டாளி மக்களின் விழிப்பு நாள் என்று அறிவித்தனர்!

"உரிமைக் கோரிக்கையை உயிர் போயினும் விடோம்!" என்பதைக் காட்ட ஒவ்வொரு ஆண்டு மே மாதம் முதல் நாளையும் கொண்டாட வேண்டும் என்றுமுடிவு செய்தனர். அன்று, முதல் 'மே தினம்'—உழைப்போரின் உரிமை முழக்கத் தினமாயிற்று!

கருப்பு-ரோஜா!

[அரங்கண்ணல்]

"நண்பர்களே! இன்னொரு முறை என்னை 'மன்னவனே' என்று அழைக்காதீர்கள்—நான் மண்ணில்லாத ராஜா, இருக்க இடமில்லாத ஏழை! 'தலைவரே' என்று அன்பு ததும்ப அழைக்கிறீர்கள்; ஆனால் 'நாமதித் தக்கிட' என்று சட்டம் என்னை மிரட்டிக்கொண்டிருக்கிறது! கை கட்டி என்கட்டளைக்குக் காத்து நிற்கிறீர்கள்; ஆனால் இதோ என் மீது 'கண் வைத்து' காவல் புரிகின்றனர் போலீஸ் படையினர்! உங்கள் காவலன்தான் நான்; ஆனால் கைதியாகக் கட்டுண்டுகிடக்கிறேன்! இது, எனது நாடுதான்—ஆனால் 'இங்கு வரலாமா' என்று உத்திரவுவேண்டியிருக்கிறது எனக்கு!" இப்படியெல்லாம் அவன் வாய்விட்டுப் பேசவில்லை—வந்திருந்தோரைப் பார்த்தான், அவன் இதயம் பெருமூச்சு விட்டு ஒரு முறை குலுங்கியது!

மாலை சூட்டினர், நமது மன்னர் வந்துவிட்டார் என்று வரவேற்றனர். ஆனந்த ஆரவாரம் கிளம்பியது—ஆனால் அத்தனையையும் கண்காணித்து நின்றது போலீஸ் படை!

விமானத்திலிருந்து எடுத்தடி வைத்தான். தான் மகிழ்ந்துலாவிய மண்ணில் போலீஸ் படையினர் வந்து சூழ்ந்து கொண்டனர்—"போகவேண்டிய தூரம் இன்னும் 50 மைலிருக்கிறது, காரிலேயே போகச் சென்றுவிடுங்கள்" என்று கட்டளையிடுவதற்குப் பதில் கடிதம் ஒன்றைத் தந்தனர், போலீஸ் அதிகாரிகள்.

இன்று திங்கட்கிழமை—புதன் கிழமைதான் போகலாம் உங்கள் இடத்துக்கு போய் மனைவியைப் பார்க்கலாம் என்று அனுமதித் தரப்பட்டிருந்தது—அரசன் அவன், அவனுக்கு அனுமதி, அதுவும் தன் ஆசைக் காதலியைக் காண!

X X X

"எப்படியிருக்கிறாளோ, என்ன நினைத்துக் கிடக்கிறாளோ, ஏங்கி இளைத்தாளோ!" என்றஎண்ணங்கள் இதயத்தை இடிக்க உட்கார்ந்திருந்தான் - உணர்ச்சியற்ற பிம்பம்போல.

கூடி நின்ற அவனது மக்களிடமிருந்து ஒரு கேள்வி அவனை நோக்கி வந்தது. "மன்னா! எப்போது திரும்பப் போகிறீர்கள்?"

"போகவா, உங்களை விட்டு நான் போகவா, அந்த ஆசை எனக்கில்லை! ஆனால் இருப்பேனா—இதுவும் சந்தேகந்தான்! 'வெளியே செல்' என்று நான்கு மாதங்களுக்குள் தாக்கீது வந்துவிடுமென்றே நினைக்கிறேன்.!!

"தாக்கீது, வந்தால்......"

"போகவேண்டியதுதான்,உங்களையெல்லாம் விட்டுவிட்டு மறுபடியும் புறப்படவேண்டியதுதான்!"

"போவதா? எங்கே போவது?"

"எங்கு செல்வேனோ, எப்படி வாழ்வேனோ, எனக்கே புரியவில்லை! மீண்டும் இலண்டன் செல்லவும் எண்ணமில்லை..........எனக்கு ஒன்றுமே புரியவில்லை!"

X X X

அவன் ஒரு நாட்டின் மன்னன்—எனினும், நாடு அவனிடமில்லை; நாட்டிலும் அவனில்லை! வெளியேற்றப்பட்டிருந்தான், நாட்டை விட்டு 'ஐந்து ஆண்டுகள்' கடத்தப்பட்டிருந்தான்—மக்களாலல்ல, அப்படியிருந்தால் கூட அது அவனுக்கு எவ்வளவோ மகிழ்ச்சியைத் தந்திருக்கும். தனக்கும் தன் நாட்டுக்கும் சம்பந்தமற்ற ஒரு சர்க்காரால் நாடு கடத்தப்பட்டிருந்தான்.

அவன் கல்யாணம் செய்து கொண்டான்—அதுதான் காரணம், அவன் வெளியேற்றப்பட்டதற்கு!

கர்ப்பவதியான காதலியை விட்டு, கலங்கிய மனதோடு இருந்த அவன் விரட்டப்பட்டான் — இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டான்!

திருமணம் சுகத்தைத் தருமென்பார்கள், ஆனால் அவனுடைய திருமணம் வாழ்வையே பொசுக்கியது! மணிமுடியை இழக்கும் சூழ்நிலையைச் சிருஷ்டித்தது!

மணிமுடி — காதலியின் கண்ணொளியிலே பிடிமண்ணாகப் பட்டது அவனுக்கு! மங்கை தந்த போதை, ஆட்சி போதையை விட அவனை ஆட்கொண்டு விட்டது! அவள் இதயமே என் ராஜ்யம்—எனது ஆசைக் கனவுகளே என் பிரஜைகள்! என்று முடிவு செய்து விட்டான்.

ஓட்டப்பந்தயம், குதிரைச் சவாரி, குத்துச்சண்டையெல்லாம் தேறினவன் அவன்—சிறந்த பரிசுகளைப் பெற்றவன்—எனினும் அந்த ஒய்யாரியின் உல்லாசப் பேச்சு அவனை உட்காரச் செய்தது!

"மலையெதிர்த்தாலும் சரி, மானே! உன்னை நான் கைவிடமாட்டேன்" என்றான்.

"மலை எதிர்த்தால் சரி நாதா! மக்கள் எதிர்த்தால்..." கேலி அவளது கீதக்குரலில் தொனித்தது.

"மணி முடி இழப்பேன், இம்மலரை அணைப்பேன்!"

"மோக வெறியால் பல முடிகள் முறிந்திருக்கின்றனவாம்!"

"மோகமல்ல கண்ணே! முடிவோடுதான் கூறுகிறேன். மணப்பேன். உன்னையே மணப்பேன்."

அழகான ஆங்கில மொழியில், 27-வயது நிரம்பாத இளங்காளையும் 24 நிரம்பாத அந்த இளங்கொடியும் பேசிக்கொண்டனர் — இதயத்தை ஒன்றாக்கிக் கொண்டனர்! இலண்டன்மாநகரில் வக்கீலுக்குப் படித்துக்கொண்டிருந்த அந்த வாலிபனும், அந்த தேன்மொழியும் ஒரு நாள் சேர்ந்து சென்றனர்—திருமணப் பதிவு அலுவலகத்துக்கு! திரும்பும்போது, இருவர் ஒன்றாகியிருந்தனர்! காதல் ஜோடிகள் 'கணவனும் மனைவியுமாக' வெளியே வந்தனர்!

* * *

"கருப்புக்கும் — ரோஜாவுக்கும், கல்யாணமாமே!" கேலி பேசினர் பலர்.

"அதைவிட இப்படிச் சொல்லு! இதுதான் ரொம்பப் பொருத்தம்— இருட்டுக்கும் — வெளிச்சத்துக்கும் திருமணம்!!" கிண்டல் செய்தனர்.

"எப்படியப்பா துணிந்தாள், அவனை மணக்க! எல்லாம் பண ஆசைதான் போலும்" திருமணம் கண்டு சஞ்சலம் கொண்டோர் இது போலப் பேசினர்.

"கல்யாணமா இதற்குப் பெயர்? கருமாதி! துணிச்சலைப் பார், அந்த தூங்குமூஞ்சிக்கு! என்னதான் அவன் பெரிய லட்சாதிப் பிரபுவாக யிருக்கட்டுமே, அதற்காக இப்படியா நடந்துகொள்வது! பணம் பெரிதல்லப்பா பணம்! மானம்தான் பெரிசு— நம் 'மானத்தைக் கப்பலேற்றி விட்டாளே!" ஆத்திரம் கொண்டோர், இவ்விதம் அள்ளி வீசினர், அனல் மயமான சொற்களை! 'எப்படி இவள் அவனை மணக்கலாம் — இழுக்கு நமக்கல்லவோ வந்துவிட்டது'என்று அவளைச் சார்ந்தோர் ஆத்திரப்பட்டனர். ஆயாசம் அவர்களைத் துடிக்கச் செய்தது.

* * *

மணமகன் வீட்டுக்குத் தகவல் எட்டியது. "படிக்கச் சென்ற பையன் யாரோ ஒரு வெள்ளைக்காரிச்சியின் வலையில் வீழ்ந்துவிட்டான்!" என்று கேள்விப்பட்டதும், இளைஞனைச் சார்ந்தோர் கொதித்தனர்.

புழுப்போலத் துடித்தான், ஷேகடி—மணமகனின் சிற்றப்பன்—'அழியாத அவமானத்தைச் சுமந்துவிட்டானே! என்ன அக்கிரமம்! இந்நாட்டின் எதிர்கால ராஜா வல்லவோ, அவனுக்கு இதுகூடவா மறந்துபோயிற்று மோக வெறியில! கேட்டால் சிறுவார்களே, இங்குள்ளோர்" என்று வேதனைப்பட்டான். ஈட்டியின் பாய்ச்சல்கள்—இரண்டு முனையிலிருந்தும்! இடையில் புன் சிரிப்பு வீச, புது இன்பம் குடித்து, மகிழ்வோடு உலவினர், அந்தப் புதுக் காதலர்கள்!

"உடனே புறப்படு. உன் போக்குக்கான காரணங்களை விளக்கிச் சொல்"—தாக்கீது ஒன்று வந்தது, தென் ஆப்பிரிக்காவின் மத்தியிலிருக்கும் சேரோவ் நகரிலிருந்து!

தனக்குப் பதில், தன் ராஜ்யத்தின் காவலனாகயிருக்கும் தனது சிற்றப்பன் விடுத்த செய்தியோலையைக் கண்ட செரட்ஸிகாமா திகைக்கவில்லை —புறப்பட்டான்! சட்டப் படிப்புக்காக இலண்டன் வந்து இரண்டு ஆண்டுகள் 'ஆக்ஸ்போர்டு' பல்கலைக் கழக மாணவனாகயிருந்து, இலண்டன் 'டைப்பிஸ்டான' ரூத்-வில்லியம்ஸ் என்ற வெள்ளை மாதை, மனையாட்டியாக்கிக்கொண்ட செரட்ஸி, புறப்பட்டான், தனது ராஜ்யத்துக்கு— பமாங்வடோ மலைஜாதியினரின் தலைநகரமான சேரோவ் நகருக்கு!

"மறந்துவிடமாட்டீர்களே, மக்களின் எதிர்ப்பைக்கண்டதும்" என்று புறப்பட்டுக்கொண்டிருந்த அவனை நோக்கி அவள் கேட்கவில்லை! அவளறிவாள் எரிமலையும் பூகம்பமும் வெடித்தாலும், எது நேர்ந்தாலும் அவன் இதயத்தில் பதிந்த தன் உருவத்துக்குப் பங்கம் வந்துவிடாதென்பதை!

புத்திமதிகள் சொல்லினர், பலர் செரட்ஸிக்கு. வேண்டாம் இந்தத் திருமணம், ரத்துசெய்துவிடு, 'வெள்ளைக்காரிச்சி'யை தங்கள் ராணியாக்க நம்மவர் சம்மதிக்கமாட்டார்கள். இப் பதவிக்கே ஆபத்து வந்தாலும் வரலாம்—யோசித்துப் பார்! எவனுக்காகவோ, இவ்வளவு நாட்கள் உனக்காக உன் சிற்றப்பனால் பாதுகாக்கப்பட்ட இந்த ராஜ்பத்தை இழப்பதா? நயமாகச் சொல் அவளிடம், எப்படியாவது ரத்து செய்துவிடு—நமது குலத்தில் உன் மனதுக்குப் பிடித்த ஒருத்தியைப் பார்த்து மணமுடிக்கிறோம்—என்று நல்லோர் என்று கருதப்பட்டோர் சேரட்ஸிக்குக் கூறினர்.

வெள்ளையரும் வாளாயிருக்கவில்லை—செரட்ஸி, தென் ஆப்ரிக்கா சென்றிருந்த சமயம் ரூத்-வில்லியம்மிடம் சென்றனர். 'கெடுமதி வேண்டாம், வில்லியம்! கெட்டலைந்துவிடாதே, பதவி பணத்துக்கு ஆசைப்பட்டு வாழ்வை வீணாக்கிக் கொள்ளாதே. 'ரோஸ்' நிறத்தையும் 'கருப்பு' வர்ணத்தையும் சேர்த்து வைத்தால் அழகாயிருக்குமா?'பார்ப்பவர்தான் என்ன சொல்வார்கள். ரூத்—நீ விஷயம் தெரியாதவளல்ல. நீயே, யோசித்துப் பார், இந்தப் போக்கு நல்லதா?" என்று இதோபதேசங்கள் செய்தனர். 'ராணி ஆ[illegible] வேண்டும் என்ற நப்பாசை கொண்[illegible] நானிலம் புகழும் நமது வர்க்[illegible]துக்கு இழிவைத் தேடித் தரா[illegible]' என்று எச்சரித்தனர்.

'என்னடி வில்லியம்! உன் புத்[illegible] கூடவா மாறிவிட்டது......ரோஜ[illegible] நிறக் கன்னங்களை கருப்பு நிற உத[illegible]கள் சந்திக்க எப்படியடி மனம் ஒப்[illegible]னாய்' தோழிகள் விடுத்த கண்டன[illegible] கடிதம் இது!

இவை யாவும் அவளை அசைக்[illegible]வில்லை!

"விஷயமறியாதவர்கள்— காதலின் மகத்துவம் அறியாத கபோதிகள்! நான் பட்டத்து ராணியாக ஆசைப்படுகிறேனாம் பழி சுமத்துகின்றனர். பயமுறுத்துகின்றனர், பட்டத்து ராணியாக 'கருப்பர்' என்னை ஏற்க மாட்டார்களாம்! அதையா நான் எதிர்பார்க்கிறேன் — அவருடைய இதயராணி என்ற பட்டம் எனக்கு எப்போதோ கிடைத்துவிட்டதே!" என்று அவள் கூறினாள், தனக்கு வேண்டியவர்களிடம்.

ராஜ்யாதிகாரி என்ற பட்டம் போனாலும் பரவாயில்லை — என்று மறுத்தான் செரட்ஸி! மணந்தவன் என் மதிப்பைக் கவர்ந்தவன் என்று மறுத்தாள் வில்லியம்!

தாகர்கள் பாடு சங்கடமாகிவிட்டது! தூற்றல் புராணம் பாடினர்— வெள்ளையருக்குக் கோபமும் ஆவேசமும் அணைபுரண்டுஎழுந்தது! தென் ஆப்பிரிக்க யூனியன் சர்க்கார் இத்திருமணம் தங்கள்பெருமைக்கு வந்த பேராபத்து என்று ஓலமிட்டது! மலான்—தென் ஆப்பிரிக்கப் பிரதமர் மனம்-பதறினான்!

பமாங்வடோ மலைஜாதி மக்களோ திகைத்தனர் — மகுடத்துக்காக அந்த மங்கையை இழக்கமாட்டேன் என்று தங்கள் மன்னன் கூறுவதைக் கேட்டு! ஷேகடி-க்கு ஒன்றும் புரியவில்லை—செரட்ஸியின் தந்தை இறந்தபோது செரட்சிக்கு வயது நான்கு. அப்போது முதல் அவனை எடுத்து வளர்த்து, அவனுக்குப் பதில் ராஜ்யாதிகாரியாகயிருந்து, செரட்ஸியின் நன்மைக்காகப் பாடுபட்டவன், அவன்!

செரட்ஸியை வக்கீல் படிப்புக்காகப் போகுமாறு வற்புறுத்தி லண்டனுக்கு அனுப்பி வைத்ததும் அவன் தான். 24 ஆண்டுகள், அண்ணன்

இறந்த பிறகு, பமாங்வடோ மலை ஜாதி மக்களின் தலைவனாகவிருந்து தொண்டு புரிந்து தொண்டுகிழமாகி விட்ட அவன், தன் பொறுப்பைத் தனயன் மீது சூட்டத் துடித்தான்! தனயனோ, தளிர்க்கொடியாளை இழக்கச் சம்மதியேன் என்று தர்க்கம் செய்கிறான். சிக்கலான நிலைமை— சில மாதங்கள் சென்றன!

x x x

பத்தொன்பதாவது நூற்றாண்டின் ஆரம்பகாலம்— தென் ஆப்பிரிக்காவில் வாழும் ஆதிவாசிகளின் வாழ்வில், அலைமோதியது! ஐரோப்பிய நாட்டிலிருந்து அந்நியர் குடியேறி, அவர்கள் வாழ்வை அல்லல் மயமாக்கினர்! அவல நிலையில் அவதிப்பட்ட மக்கள் மத்தியிலிருந்து, ஒரு வீரன் கிளம்பினான்! தொல்லை தந்து கொண்டிருந்த அந்நியரை, தனது மக்களைத் திரட்டி எதிர்த்தான் — எதிர்ப்பு முடிந்து, வெறி கொண்டோரை விரட்டிக்கொண்டிருக்கும் வேளையில் போயர்கள் ஆதிவாசிகள் மீது படையெடுத்தனர். பிரிட்டிஷார் வசமாகியிருந்த பிரதேசங்களைத் தாண்டி, தாங்கள் தங்குவதற்கான இடங்களைத் தேடியலைந்து கொண்டிருந்த போயர்களுடன் போராட வேண்டிய நிலைமை ஏற்பட்டது, ஆதிவாசிகளின் தலைவனுக்கு!

இந்த நேரத்தில் பிரிட்டிஷாரின் புகழ் ஆதிவாசிகளிடையே பரவிக்கொண்டிருந்தது—கிருஸ்தவ பாதிரிமார்கள் ஆங்காங்கு புறப்பட்டு போதனைகள் புரிந்துகொண்டிருந்தனர்! புதுநாகரிகம் 'இருண்ட கண்டம்' என் அழைக்கப்பட்ட ஆப்பிரிக்காவில் பரவிக் கொண்டிருந்தது. விரோதிகளின் போரிலிருந்து ஆதிவாசிகளைக் காப்பாற்றும் நற்செயலில், அடிக்கடி அந்தப்பாதிரிகள் ஈடுபட்டதால், ஆதிவாசிகளின் தலைவனான காமாவுக்கு அவர்கள் மீது ஆசை பிறந்தது! கிருஸ்தவனானான்—தனக்குக் கட்டப்பட்ட ராஜ்யத்தையும் பிரிட்டிஷ் ஆட்சிக்குக் கீழ் வைக்க ஆசை கொண்டான்; அடிக்கடி அந்நியர்களின் அவதியைத் தனித்து நின்று சமாளிப்பதை விட, ஆங்கிலேயராட்சிக்குக் கட்டுப்பட்டிருந்தால், பொறுப்பு அவர்களுக்கு மாறும், புதுமை தன் மக்களிடம் மலரும் என்ற எண்ணத்தால்! விக்டோரியா ராணியார் காலத்தில், 1885ம் ஆண்டில், தென் ஆப்பிரிக்காவின் மத்தியில் 27,000 சதுரமைல் விஸ்தீர்ணமுள்ள ஆதிவாசிகளின் பிரதேசம், பிரிட்டிஷ் சர்க்காரின் 'பாதுகாப்புக்குரிய நாடு' எனப் பிரகடனப் படுத்தப்பட்டது.

ஆதிவாசிகளிடையே மொத்தம் எட்டுப் பிரிவுகள் இருந்தன. அந்த எட்டுப் பிரிவுகளில் ஒன்று நெக்வாடோ பிரிவு. இந்தப் பிரிவினரின் தலைநகரம்தான் செரோவ்.

ஆதிவாசி மக்களாகிய இவர்களின் மொத்தத்தொகை 2,90,000 ஆகும் இதில் நெக்வாடோ பிரிவினரே ஏனைய ஏழு பிரிவினரையும் விடச் சிறிது நாகரீக முதிர்ச்சியும் அதிக மக்கள் தொகையும் உடையவர்கள். இவர்கள் தொகை மொத்தம் ஒரு இலட்சமாகும்—இந்த ஒரு இலட்சம் மக்களின் தலைவனாகயிருந்தவன் தான் காமா—அவனுடைய பேரன் தான் காதலுக்காக மணிமுடியையும் தியாகம் செய்யத் தயாராயிருக்கும் செரட்ஸிகாமா!

நடத்து லோகத்தை!

மனிதரில் நீயுமோர் மனிதன்; மண்ணன்று!
இமைதிற! எழுந்து நன்றாய் எண்ணுவாய்!
தோளை உயர்த்து, சுடர் முகம் தூக்கு!
மீசையை முறுக்கி மேலே ஏற்று!
விழித்த விழியில் மேதினிக் கொளிசெய்!
நகைப்பை முழக்கு! நடத்து லோகத்தை!

—புரட்சிக் கவிஞர்

செம்மைப்படாத வாழ்வு, காட்டுமிராண்டித்தனம், பரம்பரைப் பழக்கம் ஆகியவைகளில் மூழ்கிக் கிடந்த மலைஜாதி மக்களை 'மனித நாகரீகத்துக்கு' இட்டுச்செல்ல, காமா, பற்பல முயற்சிகள் செய்தான். நெக்வாடோ பிரிவு தவிர மீதி ஏழு பிரிவினரும் தனித்தனி மூன்று தலைவர்களுக்குக் கட்டுப்பட்டிருந்தார்கள். அந்த மூன்று தலைவர்களும் காமாவையே தங்கள் வழிகாட்டியெனக் கருதினர்.

வெளியுலகம் விஞ்ஞான மயமாகிக் கொண்டிருப்பதையும், தனது மக்கள் அறியாமை, காட்டுமிராண்டித்தனம், கண்மூடிப் போக்கு ஆகியவைகளால் கட்டுண்டுகிடப்பதையும் கண்டு மனம் பதறினான்—காமா! அவர்களை அறியாமை இருட்டிலிருந்து மீட்கப் போரிட்டான்.

மந்திர தந்திரம், பில்லி சூன்யம், பரம்பரைப் பழக்கம் ஆகியவைகளை எதிர்த்துப் போரிட்டான்!

இருட்டுக் கண்டத்தின் இணையற்ற வீரனாகஇருந்த காமா 1933ல் மரணமடைந்தான். காமாவின் மரணத்துக்குப்பின் முதல் மகன் செக்கே காமா தலைமைப் பதவி பெற்று, சில ஆண்டுகள் பமாங்வடோவின் மன்னனாக இருந்து ஆட்சிபுரிந்தான். அவனுக்குப் பின்பட்டம்பெறவேண்டியவன், அவனது புதல்வனான செரட்ஸி காமாதான். ஆனால், செரட்ஸி சிறு குழந்தையாகயிருக்கவே, செக்கே காமாவின் தம்பியாகிய ஷேகடி ராஜ்ய அலுவல்களைக் கவனிக்கும் பிரதிநிதியாகப் பீடமேறி, தந்தையும் அண்ணனும் விட்டுச் சென்ற சீர்திருத்தப் பணிகளைச் செய்தான்! இலட்சக் கணக்கான பவுன்களைத் திரட்டி, பள்ளிகளையும், அறிவூட்டும் பணிகளையும் செய்தான். பட்டத்துக் குரியவனான செரட்ஸியைப் படிக்க வைத்து—இலண்டனுக்கும் அனுப்பினான்! இலண்டனில் வாழ்ந்த செரட்ஸிக்கும்—ரூத்-வில்லியம்சுக்கும் காதல் அரும்பி, மலர்ந்து விட்டது!

x x x

சிக்கலான நிலைமை—சில மாதங்கள் சென்றன! மலைஜாதி மக்களின் பிடிவாதம் தளர ஆரம்பித்தது—வேறு வழியில்லையே, என் செய்வது என்று பேசலாயினர்!

எதிர்த்தவர்கள் போக்கு, மாறி வருவதைக் கண்ட செரட்ஸி, ஒரு நாள் "கோட்லா"வைக் கூட்டினான்! கோட்லா—ஆதிவாசிகளின் பிரதிநிதிகளடங்கிய சபைக்குப் பெயர்! பிரதிநிதிகள் வந்து கூடினர்—ஒரு பெரிய மரத்துக்குக் கீழே! அந்த மரம்தான் அவர்களது 'பரம்பரைப்

பார்லிமெண்டு'! பிரதிநிதிகளிடம் தனது முடிவைச் சொன்னான்—வீரத்தோடு விளக்கினான்! "வெறுக்கின்றனர் நம்மை வெள்ளையர். உண்மை, நான் மறுக்கவில்லை! நாயினும் கேடாய் நம்மை நினைக்கின்றனர்—நினைத்தால் நெஞ்சம் துடிக்கிறது! அதற்காக.........ஐ பிடித்தவளை, நமது பெருமையுணர்ந்து முன்வந்த ஒரு பெண்மணியை, நான் உதறித் தள்ளுவதா? இது நேர்மையா? நெஞ்சிலே கை வைத்துச் சொல்லுங்கள்!" என்று முழக்கமிட்டான்.

எல்லோரும் "அதோ எங்கள் ராணி" என்று முழக்கமிட்டனர்—ஆனந்தத்தோடு 'வாழ்க எங்கள் மன்னர்' என்று ஆரவாரித்தனர்!

சில மாதங்களுக்கு முன் எதிர்த்தோர், இன்று வாழ்த்தொலி முழங்குவது—பலருக்கு புரியாத புதிராக இருந்தது!

மலைஜாயினரே எதிர்க்கிறார்கள்—மன்னன், மகுடமிழப்பான்! வெள்ளை மாதை மணந்ததற்குச் சரியான தண்டனை கிடைத்துவிடும்.

'ராணியாகலாம்' என்றுமனப்பால் குடித்த ரூத்-வில்லியம் ஆசையும் கனவாகும், கர்வமும் அடங்கும்! என்று எண்ணிக்கிடந்த நிறவெறி ஆதிக்கக்காரர்களுக்கு "கோட்லா" செய்த முடிவு—எரிகிற தீயில் எண்ணெய்விட்டது போலாயிற்று!

கொதித்து எழுந்தனர்—செரட்சி—ரூத், திருமணம் ஆப்பிரிக்க ஆதிவாசிகளிடையே பெரும் உள் குழப்பத்தை உண்டு பண்ணிவிடும் என்று அலறினர்! 'ஆபத்து! ஆபத்து!' என்று கூச்சலிட்டனர்!

பேச்வானா லேண்ட், ஸ்வாசி லேண்ட், பாசுடோலேண்ட் என்ற மூன்று பெரும் பிரதேசங்களும் ஆதிவாசிகளின் மூன்று தலைவர்களுக்குக் கட்டுப்பட்டு, பிரிட்டிஷாரின் 'பாதுகாப்புநாடுகளாக' இருந்துவருபவை!

வெள்ளையர்களின் ஆதிக்கத்திலிருக்கும் தென் ஆப்பிரிக்க யூனியன், தென் ரோடேஷியா ஆகிய நாடுகள் இந்தப் பிராந்தியங்களின் எல்லைகள். எனவே, மேற்படி சர்க்கார்கள் பிரிட்டிஷ் சர்க்காருக்குப்பய முறுத்தலும், எச்சரிக்கையும் விடுக்கவே—தங்களவர் பேச்சுக்குத் தலையாட்டும் வெள்ளையாதிபத்தியமும், செரட்சியை—நாடு கடத்தியது, ஐந்து ஆண்டுகள் தேசப்பிரஷ்டம் செய்தது!

அதுமட்டுமல்ல—அவன் பெசுவானாலேண்டின் மன்னனாக அருகதையுடையவனா என்பது குறித்தும் ஒரு கமிஷன் விசாரணை செய்துகொண்டிருக்கிறது—கமிஷன் பிரிட்டிஷ் சர்க்காரால நியமனம் செய்யப்பட்டது! ஆப்பிரிக்க வெள்ளை நிற வெறித் தலைவன், மலான் வேண்டுகோளுக்கிணங்க, இக்கமிஷன் நியமனம் செய்யப்பட்டு, 1949 நவம்பர்முதல் விசாரணை நடைபெற்று வருகிறது

"கருப்புக்கும்—ரோஜாவுக்கும் கல்யாணமாமே!" என்று கேலி பேசிய கும்பல், "கருப்பு—ரோஜா!" என்று செரட்ஸியையும் அவன் மனைவியையும் பெயரிட்டு அழைத்த நிறவெறித் திமிர்—இப்போது, துளிர்விட்டெரியத் துவங்குகிறது!

பிரிட்டனின் பாதுகாப்பிலிருக்கும் ஆதிவாசிகளின் மூன்று பிரதேசங்களையும் தென் ஆப்பிரிக்கயூனியனுடன் சேர்த்துவிடத் திட்டம் தீட்டிக்கொண்டிருக்கிறான் மலான்—தென்ஆப்பிரிக்கப் பிரதமர்!

தனது சூழ்ச்சித் திட்டத்துக்கு செரட்ஸியின் திருமணத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு, இரகசிய வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறான்.

நிறவெறி—ஏழ்மையில் உழலும் மனிதக் கூட்டத்தை விழுங்கி ஏப்பமிட எத்தனங்கள் செய்துகொண்டிருக்கிறது!

பமாங்வடோ மக்களோ இன்று ரூத்—வில்லியம்மை "மஹைராணி" என்று பெருமிதத்துடன் போற்றிப் புகழ்ந்துகொண்டுள்ளனர். தங்கள் மன்னன் செரட்ஸிகாமா திரும்ப வேண்டுமெனத் துடித்துக்கொண்டிருக்கின்றனர்.

அவர்களின் துடிப்பு—துடுக்குத்தனமாகப் படுகிறது, வெள்ளை வெறியர்களுக்கு!

கர்ப்பவதியான தன் மனைவியைக் காண வேண்டுகோள் விடுத்து "அனுமதி" பெற்று, "காத்துக் கிடந்து" போலீஸ் காவலுடன் சென்றிருக்கிறான், செரோவ் நகருக்கு—செரட்ஸிகாமா, ஒரு நாட்டின் மன்னன், ஒரு இலட்சம் மக்களின் தலைவன்!

"கருப்பு ராஜா!"—வை மணந்த ரூத்-வில்லியத்தை "கருப்புரோஜா!" என்று கிண்டல் செய்தோர் இன்று கருப்பும்-ரோஜாவும் சந்திக்கத் தங்கள் அனுமதி கோரும் அளவுக்குத் தங்கள் வெறிப்போக்கை அதிகரித்துக் கொண்டிருக்கின்றனர்!

*

வெள்ளை நிறக் கூட்டத்தைச் சேர்ந்த ஒருத்தியை—கருப்பு நிறத்தவன் காதல் கொண்டு கல்யாணம் செய்து கொண்டதைக் கண்டு, கொதித்து எழுந்து சிறிப் பாய்கிறது!

இடைஞ்சல்களையும், மனமொத்த வாழ்க்கைத் துணைவர்களைப் பிரிப்பதற்கான இடையூறுகளையும் பல ரூபங்களில் உண்டாக்கிக்கொண்டேயிருக்கிறது—அவ்வளவு வெறி விளையாடுகிறது, வெள்ளையர் இதயங்களில்! காதலித்தது குற்றம்! கல்யாணம் செய்துகொண்டது அதைவிடப் பெருங்குற்றம்!!—பழி சுமத்தி, சூதுவாதறியாத ஆதிவாசிகளையும் தூண்டிவிட்டுத் தொல்லைகளைச் சிருஷ்டித்துச் செரட்ஸிக்குப் புத்தி கற்பிக்கப் பலவித வழிகளில் திட்டம் தீட்டுகிறது—பெரிய பிரச்னையாக்கியிருக்கிறது!

ரூத்வில்லியத்தை மணம் செய்துகொண்ட செரட்ஸி—வேறு மதத்தவன்கூட அல்ல! 'எல்லோரையும் நேசி'என்று அன்புபதேசம் செய்யும் கிருஸ்துவ மதத்தைச் சேர்ந்தவன்தான்—இருந்தும் இவ்வளவு எதிர்ப்புகளைச் செய்துவிட்டு, பலிக்காமற் போகவே இப்போது தந்திர வேலைகளில் இறங்கியிருக்கிறது!

'கருப்பு—ரோஜா' மணம், சிறு நிகழ்ச்சிதான். ஆனால் நிறவெறியும் ஆதிக்க வெறியும் எவ்வளவு கோர நர்த்தனமிடுகிறது, மனித சமுதாயத்தில் என்பதை விளக்குவது.

நிறவெறி என்றும் நீடிக்கமுடியாது—பல 'ரூத்—செரட்ஸி'கள் மனித சமுதாயத்தில் உருவாகிக் கொண்டுதானிருப்பார்கள். அவர்களது முன்னேற்ற மூச்சில ஆதிபத்திய வெறியர்களின் அகம்பாவம் சுட்டுப் பொசுங்கி, கருக்கப்படும் காலம் வந்துதான் தீரும்!

'கருப்பு—ரோஜா' கலப்பு, நிறபேதத்துக்கு ஒரு சாவு மணி! நீடிக்காது உங்கள் தர்பார் என்பதை விளக்கும் ஏழை இதயங்களின், எதிரொலி!!

பால பாடம்

பாதாம் அல்வா — அதிகமாக விற்பனையாகிறது. நாலணாவிலிருந்து ஐந்தணாவென விலையையுயர்த்தினாலும் வாங்குபவர்கள் இருக்கிறார்கள் என்று தெரிந்ததும், ஓட்டல்காரர் முன்னைவிட அதிகமாகத் தயார் செய்கிறார்!

தயார் செய்வதன் நோக்கம், எல்லோரும் பாதாம் அல்வா சாப்பிட்டு, இன்பம் பெறவேண்டுமென்பதல்ல; இலாபம்தான்! கேட்டாலோ, "ஜனங்களுக்குச்சவுகரியம் செய்வதுதானே எங்கள் போன்றாரின் வேலை சார்! அதற்காகத்தான் அதிகமாகப் போடச் சொன்னேன், அல்வா!" என்று அன்போடு நெளிந்து வளைந்து பதில் கூறுவார் கேட்பவர்களுக்கு, ஓட்டல்காரர். நினைவோ, இலாபத்தின் மேலேயிருக்கும்!

நிலைமை மாறுகிறது.

முன்புபோல, பாதாம் அல்வாவுக்குக் கிராக்கியில்லை, வருபவர்கள் ஐந்தணா கொடுத்தும் வாங்கும் நிலையிலில்லை. 'வடையும், காப்பியும் கிடைத்தால்போதும்' என்ற அளவுக்கு வந்து விட்டார்கள். இப்போது, ஓட்டல்காரர் முன்போல் பாதாம் அல்வா தயாரிக்க மாட்டார். விற்பனையாகாது, லாபம் கிடைக்காது, என்று அறிந்ததும் தயார் செய்ய மாட்டார்! யாராவது கேட்டால், "எங்கே சார் முடியறது? சாமான் கிடைக்கலே! சர்க்கரையோ கொள்ளை விலை விற்கிறது," என்று குறைபட்டுக் கொள்வார்.

X X X

"உற்பத்தியைப் பெருக்குங்கள்! மக்கள் வாழ வழி செய்யுங்கள், பொருள்களை ஏராளமாக உற்பத்தி செய்யுங்கள், மனிதாபிமானம் நிறைந்த மகத்தான காரியம் அது, மக்களையும் நாட்டையும் மகிழ்விக்கக் கூடியது. ஆகவே, அயராது உற்பத்தியைப் பெருக்குங்கள்!" என்று ஒவ்வொரு நாளும் ஆளவந்தார் அறைகூவல் விட்டுக்கொண்டிருக்கின்றனர்.

சர்க்காரின் வேண்டுகோளைக் கேட்கும் முதலாளிகளோ, "என்ன செய்வோம்? உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென எங்களுக்கும் ஆசைதான். ஆனால், முடியவில்லையே! உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருள்கள் கிடைக்கவில்லை. தொழிலாளர்கள் வேறு தொல்லை தருகிறார்கள்" என்ற முகாரி பாடுகின்றனர்.

சர்க்காரின் வேண்டுகோளையும், அதற்கு முதலாளிகள் தரும் பதிலையும் காணும்போது பலருக்குச் சந்தேகம் எழும்பும், வசதியில்லாத காரணத்தால்தான் ஆலையரசர்களால் உற்பத்தியைப் பெருக்க முடியவில்லை போலும் என்பதாக!

மக்களுக்குத் தேவையானவை பொருள்கள். ஆனால், நாட்டின் உற்பத்தியோ மக்களின் தேவையைக் கவனத்தில் வைத்துச் செய்யப்படுவதில்லை.

ஓட்டல்காரர் எப்படி இலாபத்தைக் கணக்குப் போட்டு அல்வா தயாரிக்கிறாரோ, அதேபோலத்தான் ஆலைகளின் சொந்தக்காரர்களான முதலாளிகளும், தங்கள் ஆலைகளில் பொருள்களை உற்பத்தி செய்கிறார்கள்.

மக்களின் தேவையல்ல, முதலாளிகளின் இலட்சியம்; தங்களுக்குக் கிடைக்கும் இலாபம்தான் அவர்களுக்கு வேண்டியது!

முதலாளித்துவ சமுதாயத்தில், பொருள்களை உற்பத்தி செய்பவர்களாக முதலாளிகள் இருப்பதால்— மக்கள், தங்களுக்குத் தேவையான பொருள்களைப் பெற முடிவதில்லை!

பொருள்களை உற்பத்தி செய்யும் ஆலையரசர்கள், இலாபத்திலேயே நோக்கம் கொண்டிருப்பதால், இலாபத்தின் அடிப்படைமீது பொருள்களை உற்பத்தி செய்கிறார்கள்—ஓட்டல்காரரைப்போல!

இலாபம் வர வழி இருக்கிறது. எவ்வளவு தயாரித்தாலும் விற்பனையாகிவிடும் என்று தெரிந்ததும், எப்படியோ உற்பத்தி அதிகமாகிவிடுகிறது, மார்க்கட்டில் ஏராளமான பொருள்கள் குவிக்கப்படுகின்றன.

முன்பிருந்த ஆலைதான் இப்போதும் இருக்கிறது, முன்னர் பணியாற்றிய அதே அளவு தொழிலாளர்கள்தான் இருக்கின்றனர்—எனினும் பொருள் முன்னைவிட அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது.

கடந்த போரின்போது, உற்பத்தி உயர்ந்தது. காரணம் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் எல்லாம் அதிக விலையில் விற்றன; அவ்வளவும் விலையாயின; ஏராளமான இலாபமும் கிடைத்தது!

பொருள்களின் விலை அதிகரித்து, இலாபம் முன்னைவிட பன்மடங்கு அதிகமாகக் கிடைக்கும்போதுதான் முதலாளிகள் உற்பத்தியை அதிகரிப்பர் என்பதை இந்தப்புள்ளி விவரம் நன்கு விளக்கும்.

ஆண்டு	விலை	உற்பத்தி
39—40	100	40.12
41—42	158	44.93
42—43	259	41.09
43—44	442	48.71
44—45	317	47.27
45—46	278	46.76
46—47	262	38.63

இது, இந்தியாவின் முக்கிய ஆலைத் தொழிலான துணி உற்பத்திபற்றியதாகும். 1943—44 ஆண்டின்போது, விலை அதிகமாக ஏறியிருக்கிறது. அப்போதுதான் உற்பத்தியும் உயர்ந்திருக்கிறது.

பொருள்கள் விலை உயர்ந்தபோது உற்பத்தியும் உயர்ந்திருக்கிறது. இதனால், அபரிமிதமான இலாபமும் ஆலையரசர்களுக்குக் கிடைத்திருக்கிறது. இந்தியப் பொருளாதார ஆலோசகர் தந்துள்ள "ஆலையரசர்கள் இலாபம் குறித்த" விவரத்தைக் கண்டால் இலாபம் எட்டு மடங்கு உயர்ந்திருப்பது தெரியும்.

1928-ம் ஆண்டு ஆலையரசர்களுக்குக் கிடைத்த இலாபம் 100 என்று வைத்துக்கொண்டால், 1942-ல் கிடைத்த இலாபம் 760 ஆகும்! அவ்வளவு தூரம் உயர்ந்திருக்கிறது. இலாபம் எட்டு மடங்காக உயர்ந்தபோதுதான், பொருளுற்பத்தியும் அதிகமாகியிருக்கிறது!

இஷ்டம்போல் எதையும் செய்யலாம், என்ன விலை வேண்டுமானாலும்

(12-ம் பக்கம் பார்க்க)

விலை இரண்டணா

திராவிட நாடு

மலர் 8 30—4—50 இதழ் 44

காணிக்கை

விதைத்துழுது அழுகிறாய்,
வதைத்தறுத்துச் செல்கிறான்!
கொண்டு சென்று குவிக்கிறாய்,
கோட்டி, பூட்டிவைக்கிறான்!

பார், பாட்டாளித் தோழனே நன்றாகப் பார்! இதயத்தை உறுத்துகிறதா...மூடிக்கொள்ளாதே, கண்களை! விழித்துப்பார், வேதனை எழும்புகிறதா! பரவாயில்லை, பார்... நீதான் பார்க்கவேண்டும்......கண்மூடிக்கிடந்தவனே, நான் காட்டுவது தெரிகிறதா? நீதான் அவன்...அதை நினைத்தவண்ணம் இக் காட்சிகளைப் பார்!

ஏர் பிடித்துழுகிறாய்,
மார்பிலுதைத்து வதைக்கிறான்!

பாடுபட்டு நெய்கிறாய்
பட்டுடுத்தி மகிழ்கிறான்!

ஏன், கண்களை மூடிக்கொள்கிறாய்? கஷ்டமாகஇருக்கிறதா......... நீதானப்பா நாட்டின் தேனீ, நடமாடும் 'தெய்வம்'......இந்தக் காட்சிகளைக் கண்டதுமே, தவிக்கிறாயே! இத்தனை நாள், வேதனை உன்னை சந்தித்தபோதெல்லாம் எங்கே மறைந்துபோய்க் கிடந்தது, இந்த ஆத்திரம்! இன்னுங் கொஞ்சம் பார்......

கருவிகளைக் காண்கிறாய்,
கைக்கொண்டவன் ஆள்கிறான்!

அதோ, அடிக்கிறானே கர்பு! அது, எது தெரியுமா? நீ வெட்டித் தந்ததுதான்! சுட்டுப் பொசுக்குகிறானே அந்தத் துப்பாக்கிகள்! அவை, நீ, அன்று செய்து தந்தவைதான்!

காதுகளை மூடிக்கொள்கிறாயே, உழைத்து உலுத்த உத்தமனே! என் பேச்சு, உன் இதயத்தைச் சுட்டெரிக்கிறதா? பாவம்! நீ, என்ன செய்வாய்? உனக்கு யாரும் இந்தக் காட்சிகளைக் காட்டவில்லை, இதுநாள்வரை!

ஆகவேதான், இந்தக் காட்சிகளைக் கண்டதும் துடிக்கிறாய், தொல்லை செய்வோரின் துடுக்கடக்குவேன் என்று உன் இதயம் துடிப்பது என் கண்ணுக்கு நன்றாகத் தெரிகிறது!

உத்தமனே, அவசரப் படாதே, இன்னுங் கொஞ்சங்கேள்! உன்மீது சவாரி செய்யும், பிரபுக்களின் ஆணவப் பிடரியை நீ ஆட்டவேண்டும் என்பதுதான் எனது ஆசை! அதற்காகத்தான், உன்னை அழைத்தேன், இக்காட்சிகளைக் காண! கண்டதும், நீ துடிப்பாய் என்பதும் எனக்குத் தெரியும்!

நீ யார் என்பது உனக்கே தெரியவில்லை—தெரியவைக்கவும் எவரும் விரும்பவில்லை. அதற்காகத்தான் உனக்கு இக்காட்சிகளைக் காட்ட விரும்பினேன். கண்டதும் கஷ்டப்படுகிறாய், இவ்வளவு வேதனைகளையும் நாமா தாங்கிக்கொண்டுகிடக்கிறோம் என்று எண்ணுகிறாயல்லவா, இப்போது! அவ்வளவு தூரம் உன் உணர்ச்சிகள் மரத்துப்போய் விட்டன—மமதையாளர்கள் உனக்குத் தந்த மதி மயக்கத்தால், விதி என்ற சொல்லால், 'கடவுள் காட்டிய வழி' என்ற போதனையால்!

உன் சிந்தனைக்குப் போடப்பட்டிருந்த அத்திரைகளைக் கொஞ்சம் விலக்கிக்கொண்டு கவனமாகக்கேள், கொஞ்சநேரம், நான் சொல்வதை!

"இது, நீ பிறந்த நாடு—இதே மண்ணில்தான் உன்னை அடித்து உதைத்து ஆட்டுகிறானே அவனும் பிறந்தான்! ஆனால் அவன் அதோ உல்லாசமாக உலவுகிறான் தன் காதலியோடு கைகோர்த்துக் கொண்டு — தனது மாளிகையின் மீது! நீயோ, வியர்வை சிந்த, வெய்யில் தகிக்க 'பொறுமையே பூஷணமாய்' உழைத்துக்கொண்டு கிடக்கிறாய்!!"

"சும்மாவா, உழைக்கிறேன்...... சோறுபோடுகிறார் அவர்! அதற்கு நான் உழைக்காமல் முடியுமோ?" என்று கேட்க எண்ணுகிறாய் போலும்! கேள்......துணிந்து கேள்! வாய்மூடி, மௌனியாக இருந்ததால்தான் மாடு போல நீயும், மமதையாளனாக உன் எஜமானும் ஆகிவிட்டீர்கள்!

"உழைத்தால்தானே உலகில் வாழமுடியும் நான்!" என்று கேட்க விரும்புகிறாயே, நண்பனே! நீயும் மனிதன்தான், அவனும் மனிதன்தான்! ஆனால் 'நீ உழைக்கிறாய், உணவு கிடைக்கவேண்டுமே' என்ற எண்ணத்தால் ஆனால், அவன்.....? அவன்தான் உன்எஜமானன்? "அவர் ஏன் உழைக்கவேண்டும்! அவர்தான் செல்வவானாயிற்றே!" என்று பதில் சொல்ல எண்ணுகிறாயோ? 'செல்வம்.........!யார் தந்த செல்வம், அவன் உழைத்தா சம்பாதித்தான்! உன் உழைப்புத்தந்த செல்வமப்பா, அது! கூலி தருகிறான், நாம் உழைக்கிறோம் என்று எண்ணுகிறாய் நீ. ஆனால் எப்போதாவது சிந்தித்திருக்கிறாயா, ஏன் தருகிறான் கூலி, எதற்காகப் போடுகிறான் சோறு, என்றெல்லாம்! நீ எங்கே நினைத்திருக்கப் போகிறாய்......நேரம்தான் ஏது? அவன் அதெல்லாம் தருவது ஏன் தெரியுமோ! உனக்காக அல்ல! உன் மீதுள்ள அபிமானத்தாலல்ல...... தனக்காக!!

"இதென்னடா பைத்தியம்! தனக்காக, ஏன், எனக்கு இவைகளைத் தருகிறான் அவன் என்றுகேட்கவிரும்புகிறாயா......... கேள், முன்பே சொன்னனே கோழை போல இருக்காதே! கேள் என்று. நன்றாகக் கேள் துணிவோடு கேள்......என்னை மட்டும் என்றல்ல! அவனையும் போய்க் கேள்!

அவனைக் கேட்டால் என்ன சொல்வான் தெரியுமோ? "இதென்னடா கேள்வி! நீ எனக்குக் கட்டுப்பட்டவன். உனது சுகதுக்கங்களில் எனக்குப் பங்கில்லையோ? நீ நன்றாக இருக்க வேண்டாமா, உன் குழந்தை குட்டிகள் வாழ வேண்டாமா..." என்று பதில் கூறுவான்! அது பதிலல்ல தம்பீ—பசப்பு வார்த்தைகள், உன்னை வலையிலேயேவீழ்த்தச் செய்யும் வஞ்சக வார்த்தைகள்!

எதையோ காட்டி, எங்கேயோ இழுத்துச் செல்கிறேனே என்று எண்ணாதே! அவன் ஏன் உன்னைப் போஷிக்கிறான் தெரியுமோ...அவன் வாழ! அவன் பெட்டி நிரம்ப!!

இன்னும் புரியவில்லையா! மாடு இருக்கிறதே மாடு, அதற்கு நாம் ஏன் தீனி போடுகிறோம்—சாவாமல், நமக்கு உழைத்துப் போடவேண்டும் என்பதற்காகத்தானே! அதைப் போலத்தான் உன் நிலையும்!!

"என்னடா இவன்! நாம்படும் கஷ்டத்தைக் காட்டினான்—விளக்கங்கள் தந்தான் இப்போது மாடு என்று கூறுகிறான்" என்று மனச்சஞ்சலப் படுகிறாயா! உண்மையைத்தான் நான் கூறுகிறேன். உன்னை அவன் மாடு என்றுதான் எண்ணுகிறான். தனக்காக உழைக்கப் பிறந்த மனித மிருகம் என்றுதான் இறுமாந்து கிடக்கிறான்! ஆனால் சிறு வித்தியாசம்—மாட்டிற்கு அவன் போடுவது பிண்ணாக்கு! உனக்கோ கஞ்சி!!

ஏன் இப்படி உனது கண்கள் சிவப்பேறுகின்றன, எனது வார்த்தைகள் உன் கோபாக்கினியைக் கிளறுகின்றனவா? மகிழ்ச்சி நண்பா, எனக்கு இரட்டை மகிழ்ச்சி! உன் இதயத்தில் எரிமலை உதயமாகவேண்டும் என்பதுதானப்பா என் ஆசை! அது ஏற்பட்டுவிட்டதென்றால் என் இலட்சியம் நிறைவேறும், நிம்மதி பெறுவேன். கிளி, கூண்டைவிட்டுப் புறப்பட்டுவிட்டது, காலை கட்டவிழ்த்துக் கொண்டது, வீரன் விலங்கை முறித்துக் கிளம்பிவிட்டான் என்று எக்காளம் முழக்குவேன்! அதில்தான் நண்பா, என் வாழ்வே இருக்கிறது!

"சரி, என்னை நான் புரிந்துகொண்டேன். இப்போது என்ன செய்வது நான்! என்னை வேதனையிலாழ்த்தியவனை, விரைவாகப் போய் வீழ்த்திவிட்டு வந்துவிடட்டுமா? கட்டளையிடும் கரங்களைக் கண்ட துண்டமாக்கி, கர்ஜனையிடும் வாயை இரண்டாகப் பிளந்து, உதைக்கும் காலை ஓராயிரம் துண்டு போட்டு, உழைக்காது மெருகேறி மினு மினுக்கும் அவன் 'சதைமலை'மீது கோரத் தாண்டவம் செய்யட்டுமா? இத்தனை நாள் என் இரத்தமெல்லாம் உறிஞ்சிக் கொழுத்தானே, அதை வட்டி போட்டு வாங்கி, நான் உழைத்து அலுத்த இப்பூமிக்கு அர்ப்பணம் செய்யட்டுமா? என்று கேட்கிறாய்... வேண்டாமப்பா, வேண்டாம்! வேதனைகளை எடுத்துக் காட்டி விளக்கியதும், வெடித்த எரிமலையாகிவிட்டாயே! வெடித்த எரிமலை, விரைவில் தன் கோரச் சப்தம் இழந்து அடங்கிவிடுமாம், அது தெரியுமோ உனக்கு? உன் உணர்ச்சி அப்படியாகிவிடக்கூடாது. ஆத்திரம் அறிவை அழித்துவிடும்! வேகம், விவேகப் பாதைக்கு முட்டுக்கட்டை போட்டுவிடும்! கொதித்து எழுந்து கொஞ்ச நேரத்துக்கெல்லாம் குந்திவிடுவது, பெரிய காரியமல்ல! வெட்டி வீழ்த்தி இரத்தம் சிந்திவிட்டுப் போய்விடுவது பிரமாதமல்ல நினைத்துப் பார், உனது புது உணர்ச்சி, புது வாழ்வு காணப் பயன்படவேண்டும்!

"உணர்ச்சியைக் கிண்டிவிட்டு உபதேசம் செய்யக் கிளம்பிவிட்டாயா?" என்று என்னை இப்படி எரித்து விடுவது போலப் பார்க்கிறாயே! வேண்டாம் இவ்வளவு கோபம், வேதனைப்பட்டவனே, ஆவசரத்துக்கு அடிமையாகாதே! நான் உபதேசம் செய்ய வரவில்லை. 'உபதேசி'யாகி 'உருத்திராட்சம்' உருட்டும் வீணன் நானல்ல என்பதுதான் உனக்குத் தெரியுமே! உன்வாழ்வு செம்மைப்பட வேண்டும், உயரப்பனும் ஒட்டப்பனும் ஒன்றாக வேண்டும், உன் உரிமைகளை நீ பெற்றுத் துன்பமற்று வாழவேண்டும் என்ற ஆசையினாலேதான் சொல்கிறேன்!

ஆத்திரப் படாதே...அடிமையாக்கியவனை விடமாட்டேன் என்று வீராவேசம் பேசிக் கிளம்பாதே—பலாத்காரத்தில் குதிக்காதே! நீயும் மனிதன், அவனும் மனிதன்தான்—இருவரும் இவ்வுலகில் வாழப்பிறந்தவர்கள்தான்! ஆனால் அவன் எத்தனாக மாறிவிட்டான்—நீ ஏமாந்தவனாக ஆக்கப்பட்டுவிட்டாய்! எத்தனும்—ஏமாந்தவனும் சாதாரண மனிதனாக வாழவேண்டும் என்பதுதான் என் போன்றோரின் ஆசை. நீ கூட அதைத்தானே விரும்புகிறாய்? "ஆமாம்!" என்று சொல்கிறாயா, அப்படியானால் நான் சொல்வதைக் கொஞ்சம்கேள், கவனமாகக்கேள்!

கொலை, கொள்ளை, வெட்டு, குத்து இவைகளால் நீ எதைச் சாதித்துவிடமுடியும்? ஆண்டாண்டு காலமாக இருந்துவரும் 'உயரப்பன்—உலர்ந்தப்பன்' பேதத்தை இதனால் போக்கிவிட முடியும் என்று எண்ணுகிறாயா! முடியாது நண்பா, முடியாது. உன் இலட்சியம் நிறைவேற இந்தப் பலாத்கார முறையால் முடியாது! ஆவேசத்தால், துடிக்கும் ஆத்திரத்தால் நீ ஈடுபட விரும்புகிறாயே நாசச் செயல்!—அது நாட்டைக் கெடுக்குமேயொழிய நல்லதாக்கிவிடாது! நல்ல மலர்ச்சோலையை நாசமாக்குவதால் நலன் ஏற்படாது, தெரியுமல்லவோ உனக்கு!

வேதனையைஉணர்த்தினான், விளைவுகளை விளக்கினான், இப்போது 'வேதாந்தம்' பேசுகிறான் என்று கூட எண்ணலாம் நீ, என்னைப்பற்றி! வேதாந்தம், பேசவில்லை, விட்டுவிடு உனது உரிமை முழக்கத்தை என்றும் 'உபதேசம்' செய்ய விரும்பவில்லை! உரிமைக்கீதம், உனது மூச்சு—அதை விடாதே! ஆனால் உனது உரிமைப்போர் — அறப்போராக இருக்கட்டும், அட்டூழியப் போராக இருக்கவேண்டாம்! ஷெல்லி—ஆங்கிலக் கவிஞன் ஒருவன், உன்னைப் பற்றிக் கூறும்போது குறிப்பிடுகிறான்.........

ஏஜண்டுத் தோழர்களுக்கு அறிவிப்பு.

7—5—50 முதல், ஒவ்வொரு வாரமும் "திராவிட நாடு" தபால், இரயில் பார்சல்கள் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் இங்கிருந்து அனுப்பப்படும். ஏஜண்டுத் தோழர்கள் இவ்வறிக்கையைக் கவனித்துப் பார்சல்களைப் பெற்றுக் கொள்ளவும்.

மானேஜர்.

விதை — ஆனால் அறுக்க விடாதே! செல்வம்தேடு— ஆனால் பறிகொடாதே! ஆடைகளை நெய்—சோம்பேறி உடுக்க விடாதே! கருவிகளைச் செய்— காப்பாற்றிக்கொள்ளப் பயன்படுத்து!

என்ன சொல்கிறான் தெரியுமோ அக்கவிஞன், 'உழைத்து வாழ்; ஆனால் உன் உழைப்பை இன்னொருத்தன் உறிஞ்ச விடாதே! அதற்கு இடங்கொடுக்காதே" என்று சொல கிறான்.

புரிந்து கொண்டாயா இதை. இப்படித்தான் நீயுமிருக்கவேண்டும். இந்த நிலையைப் பெற நீ உரிமைப் போர் நடத்தியாகத்தான் வேண்டும்.

உரிமைப் போரைத் துவக்கு' துவங்கியிருந்தால் விட்டுக் கொடுக்காதே! நியாயமான பாதையில் சென்று நேர்மைக்காகப் போராடு— நிச்சயம் வெற்றி கிடைக்கும்! ஈட்டியின் முனையோ, துப்பாக்கியின் தண்டோ, உனது உரிமை முழக்கத்தை ஊமையாக்கி விடாது! உன் இலட்சியம்—எனது ஆசை—உரிமை என்ற எஃகு கொண்டு உருக்கி வார்த்த கோட்டை. அதை ஊராள்வாரால் உடைத்துவிட முடியாது!"

X X X

மேதினியெங்கும் மே தினம்!— பாட்டாளி மக்களின் உரிமை முழக்கத்தை எதிரொலிக்கும் வீரநாள். இன்று, நம்நாட்டு உழைப்பாளிகள் லருக்கு நாம் சமர்ப்பிக்கப்படும் காணிக்கையே மேலே இருப்பது.

உழைக்கிறான், ஆனால் உரிமையில் ாமல் வாழ்ந்து சாகிறான்—உழை வனும் மனிதன்தான்; அவனும் உரிமையோடு வாழவேண்டும் என்ற முழக்கத்தை எதிரொலிக்கும் னமே—மேநாளாகும்.

மாடி வீடு — மண்குடிசை! இது ஏன்? என்ற கேள்வி, பாடுபட்டுப் ன் காணுப் பறவையாய் வீழ்ந்து நகும் பாட்டாளிகளின் இதயத் லே எழும்பவேண்டும்— எழும்பி நந்தால அது வளரவேண்டும் ற உட்பொருளைக்கொண்டதே- ந்த உழைப்போரின் திருநாள்!

உழைப்போர் உலகு, இந்த 'மூர ாலி தினத்தை' பெருமிதமாகக் ாண்டாடும் உலகின் பல்வேறு பாகங்களிலும்! ரஷ்யாவில் பெருமிதமாகப் பவனி வருவர், தங்களது தலைவர்களின் படங்களைத் தாங்கியவண்ணம், குதூகலத்தோடு! சீனாவில் யுகோஸ்லோவியாவில், பல்கேரியாவில், ருமேனியாவில், செக்கோஸ்லோவேகியாவில், ஹங்கேரியில், அல்பேனியாவில், வியட்நாமில் இந்த விடுதலைவிழா வெற்றிகரமாகக் கொண்டாடப்படும், அங்கெல்லாம் உழைப்போர் உலகு விழித்து எழுந்து வீரப்பண் பாடிக்கொண்டிருப்பதால்!

பொதுவுடைமைப் பூங்காவில் மட்டுமல்ல — முதலாளித்துவ நாடுகளில்கூட, இந்த நாள் ஆங்காங்கு அவதிப்படும் உழைப்பாளிகளின் உணர்ச்சித் திருநாளாக அமைந்திருக்கும்!

உழைக்கிறான் — ஆனால் வாழவில்லை! கூடகோபுரங்கள், மாடமாளிகைகளை நிர்மாணிக்கிறான் — ஆனால் மண்குடிசைகூடக் கிடைப்பதில்லை! வியர்வை சிந்த, காடுதிருத்தி, கழனியாக்கி, கலப்பையோட்டி 'களஞ்சியங்களைக்' கட்டுகிறான் — பிடிசோற்றுக்குத் திண்டாட்டம், பசி, பசியென்ற பரிதாபநிலை!

இது ஏன்! எப்படி ஏற்பட்டது? இதற்கொரு முடிவில்லையா? என்று ஏக்கத்துடன் கிளப்பும் உரிமை முழக்கம் — இன்று உலகின பல பகுதிகளிலெல்லாம் எழுப்பும்!

உழைப்போரின் உரிமை முழக்கம் உலகப்பாட்டாளிகளின் இதயங்களிலெல்லாம் இன்று எதிரொலித்துக் கொண்டிருக்கும். ஆனால் இந்த எதிரொலி, ஆங்காங்கு எழுப்பும் அளவுக்கு, இங்கே நமது நாட்டில் எழுப்பி இருக்கிறதா, என்று எண்ணிய போது, நம் இதயத்தில் எழுந்த வேதனையின் விளைவாக சமர்ப்பிக்கப்பட்டதுதான், தலைப்பிலே நாம் பொறித்த "காணிக்கை."

* X *

ஆட்டிப்படைத்து, அட்டகாசம் செய்துவரும் முதலாளித்துவம் முறிந்துகொண்டிருக்கிறது — பல நாடுகளில்! உழைப்போன்வாழ, பாட்டாளி ராஜ்யம் உதயமாக, உரிமை முழக்கம் உருவாகிக்கொண்டிருக்கிறது, அங்கெல்லாம்!

உழைக்கிறோம் — நீ வாழ்கிறாய்! இது சரியல்ல, இது நீடிப்பதும் நேர்மையல்ல என்று முழங்கி சொலித்துக்கொண்டு, உலகை உருவாக்கும் உழைப்போர் கூட்டம் பவனி வந்துகொண்டிருக்கிறது! ஏழை—எளியனையாகிக்கொண்டிருக்கிறான்! தன்னை ஆட்டிப்படுத்தி அடிமையாக்கிவதைத்து வாட்டும் முதலாளித்துவத்துக்குச் சவால்விட்டுக்கொண்டிருக்கிறான் — ஐரோப்பாவில்,கிரீசிலே இந்தக்கீதம், இத்தாலியிலே இடிமுழக்கம்,பிரான்சிலே ஆரம்பம், ஸ்பெயினிலே மின்னல், என்ற அளவுக்கு வளர்ந்து கொண்டிருக்கிறது. ஆசியாவிலும் உழைப்போர் உலகு, வெகுவேகமாக உருவாகிக்கொண்டிருக்கிறது!

கடந்த ஆண்டு மேதின விழாவின் போது வேதனைக்கீதம் பாடிக்கொண்டிருந்த சீனத்து மக்கள், இந்த ஆண்டு சிங்கார நடைபோட்டு நடக்கின்றனர்—பாட்டாளிகளின் ராஜ்யம் மலர்ந்திருக்கிறது! இந்தோசீனாவிலும் எரிமலை வெடித்து வெகுவேகமாகப் பரவிக்கொண்டிருக்கிறது— பிற்போக்கு ஆதிபத்யத்தின் பிடரியைப் பிடித்துத் தள்ள!

ஒவ்வொரு நாட்டிலும் உழைப்பவன் உறுமத் துவங்கிவிட்டான்-சீறிடும் புலியாகி வருகிறான், சிம்மநாதம் கிளப்பிக்கொண்டிருக்கிறான்!

மிரட்டி உருட்டி, தன் காலடியில் சிக்கிய களிமண் போல பாட்டாளி வர்க்கத்தைக் கருதிய முதலாளித்துவம், இன்று தன் முரட்டுப் போக்கை மாற்றி-மோகனப் புன்னகையால் தொழிலாளர்களை வசீகரிக்க வேண்டிய அளவுக்கு நிலைமை வளர்ந்துகொண்டிருக்கிறது!

காட்டாட்சித் தர்பார் நடத்திய முதலாளித்துவம், இன்று நயமாகப் பேசி, நல்லவர் போல நடித்து தொழிலாளர்களைச் சுரண்டும் புதுப் பாதையில் புகுந்து சென்றுகொண்டிருக்கின்றது — வெள்ளத்தைக் கண்டதும் வளைந்து கொடுக்கும் நாணல், அதைப் போல!

ஆனால், இங்கே? முதலாளித்துவம் இப்போதுதான் தன்உச்சநிலைக்குப் போய்க்கொண்டிருக்கிறது. அரசாங்கம் வகுத்துத் தரும் படிக்கட்டுகளில் உல்லாசமாகக் காலைவைத்து உயரச் செல்லத் திட்டமிட்டிருக்கிறது.

சென்ற ஆண்டிருந்த தொழிலாளர்கள் நிலைக்கும் இந்த ஆண்டில் அவர்கள் வாழும் நிலைக்குமிடையே எத்தனையோ வித்தியாசங்கள்!

ஆளவந்தார், சுட்டுவிரல் கண்டு ஆடும் நிலையிலிருப்பதால், தன் இஷ்டப்படி ஆட்டுவிக்கிறது இந்திய முதலாளித்துவம். கடந்த ஆண்டு புதுச் சட்டதிட்டங்கள் கொஞ்சம் தான் இருந்தன-தொழிலாளர்களின் நலன்களைப்பறிப்பதற்கு! இப்போதோ, 'ஆம்' என்றால் சிறைவாசம், 'ஏனெ'ன்றால் வனவாசம் என்பதுபோல உத்தரவு தரும்-சந்துபொந்தில்லாத சட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் மசோதா—தொழில் உறவு மசோதா—உருவாகிக் கிடக்கிறது! கடந்த ஆண்டு தொழிலாளர்களின்பிரதிநிதிகள் சிறையிலே கிடந்தார்கள்—இப்போதும் கிடக்கிறார்கள், முன்பைவிட அதிகமான அளவில்! இந்த ஆண்டில் குறிப்பிடத் தகுந்த வேலைநிறுத்தம் எதுவும் நடைபெறவில்லை—ஆனால் துப்பாக்கிகள் தினசரி முழங்கியவண்ணமே யுள்ளன, பலரைப் பலி வாங்கிக் கொண்டிருக்கின்றன! இமய முதல் குமரிவரை எங்கும் அடக்குமுறை!—துப்பாக்கி ராஜ்யம்!!

X X X

திராவிடத்தின் தொழிலாளரின் சக்தி—அவிழ்த்து விடப்பட்ட நெல்லிக்காய் மூட்டைபோலக்கிடக்கிறது! சிதறுண்டு சின்னபின்னமாகிக் கொண்டிருக்கிறது—உருவாகும் உதய காட்சி தென்படவில்லை!

திராவிடம்—ஆலையில்லாத நாடு. அதிக ஆலைத் தொழிலாளர்கள் இல்லாத பிரதேசம். பெரும்பாலோர், வயலிலே நிற்கும் விவசாயிகள்! 'பிற நாடுகளில், தொழிலாளர்கள் மீது முதலாளித்துவம் மட்டுமே சவாரி செய்யும். இங்கோ! முதலாளித்துவ மட்டுமல்ல 'ஜாதித்துவமும்' சதிராடுகிறது விழிக்காதுகிடக்கும் தொழிலாளர்கள் மீது.

மேல்ஜாதியினர்—பேட்டுக்குடி வாசிகளாயிருக்கிறார்கள். கீழ் ஜாதியென்போர் குடிசைபுரியினராக வேதனைப்பட்டுக் கிடக்கின்றனர்.

ஜாதிய முறை!—அதுசிருஷ்டித்த ஆயிரங் கோணல்கள், மக்களிடையே தன் ஏகேச்சாதிகார தர்பாரை நடத்திய வண்ணமே இருக்கிறது!

கல்லுடைக்கும் கொத்தன், மரமறுக்கும் தச்சன், தங்கவேலை செய்யும் தட்டான், முடிதிருத்தும் நாவிதன், 'வெள்ளை' தரும் வண்ணான், மாடு மேய்க்கும் இடையன், ஏர் பிடிக்கும் விவசாயி,—இப்படி ஏராளமான பிரிவுகள்! இவர்கள் எல்லோரும் உழைத்து வாழ்பவர்கள் – ஆனால் கூட்டாக இல்லாதவர்கள்!

சக்கிலியன், சாணன், சாம்பான், ஒட்டன், வேடன்,........ஏழையுலகின் பட்டியல நீண்டுகொண்டே போகும்.

ஏழையுலகத்துக்கு உழைப்பே செல்வம், அதுவே வாழ்க்கை வழிகாட்டி! ஆனால் ஏழை உலகம் அத்தனையும் 'கீழ்ஜாதி'ப் பட்டியலில்தான் இருக்கிறது.

கேடுவிளைவிக்கும் ஜாதியமுறை, கெட்டலையும் இந்த உத்தமர் உலகை ஒற்றுமைக் குகையாக விடாமல் உருக்குலைக்கிறது—நெல்லிக்காய்கள் போலச் சிதறிக்கிடக்கின்றது உழைப்போர் உலகம்!

சமுதாயம் தனது ஜாதிவெறி யென்ற சம்மட்டி தாங்கி தலையெடா வண்ணம் தாக்கிக்கொண்டேயிருக்கிறது உழைப்பவனை!

கீழே முதலாளித்துவம்—மேலே ஜாதிக்கொடுமை, இரண்டுக்குமிடையே அழுத்தப்பட்டு விழிகள் பிதுங்க வேதனைப் பட்டுக் கொண்டு கிடக்கிறான் பாட்டாளி!

X X X

வேதனை மயமான அவன் வாழ்வு இருண்டு கிடக்கிறது—விளக்கொளிகூட இல்லை அங்கு! வியர்வை சிந்தி, பாடுபட்டு, நாட்டை வளமாக்கும் தேனீக்களாய் திரிந்து உழைக்கும் அவன் வாழ்வில்தொல்லைமேல் தொல்லைகள்!

தொல்லையும் துயரும் நீங்கும் வழி தென்படவில்லை—இங்கு வாழும் ஏழை மகனுக்கு. இடுப்பொடிய வெந்துவேகும் அவனது உண்மை நிலை உரைக்கப்படவில்லை—வேண்டிய அளவில! விழி, பார் என்று போதித்து உழைப்போர் உலகு முழுமைக்கும் உண்மை நிலை பரப்பப்படவில்லை!

ஆலைகளில் பாடுபடும் தொழிலாளர்களுக்கெனப் போராடும் கட்சிகள் இருக்கின்றனவேயொழிய 'உழைப்போர் உலகம்' முழுவதையும் உணரச் செய்யும் ஆசையும் ஆர்வமும் எழுப்பவில்லை!

ஏழை உலகம் முழுவதும் உழைப்போரால் நிரம்பியதுதான் — ஆனால் ஏழை உலகம் இன்னும் எரிமலையாகும் நிலைபெறவில்லை—அது ஏற்பட வேண்டும், அதற்காகப் பணிபுரிய வேண்டும். பாட்டாளி, ஆலைகளில் மட்டுமல்ல, எங்கும் இருக்கிறான்! வயல்களிலே, காடுகளிலே, தோட்டங்களிலே, வீதிகளிலே........எங்கும் நிறைந்துகிடக்கிறான்! நிறைந்து கிடக்கும் உலகை ஒன்று திரட்ட வேண்டும், "உழைப்பப்பனே உனக்கே உலகம் உரியது, நீதான் உலகப்பன்," என்று உணரச்செய்ய வேண்டும். இந்த நினைவு எல்லோர் இதயத்திலும் எழும்பவேண்டும்—இதையே, உரிமைப்போர் தினமாகிய இன்று நமது வேண்டுகோள் காணிக்கையாகச் செலுத்துகிறோம், நமது நாட்டவருக்கு!

X X X

உழைத்து உருமாறியவனிடம் போய் "பார், பார்" என்று அவன் பாடுபடும் காட்சி ஒவ்வொன்றையும் காட்டினால் அவன் இதயம் குமுறும் உள்ளம் கொதிக்கும், உணர்ச்சியால் உந்தப்பட்டு வேகமாகப்பார்ப்பான்! விழிகளில்பொறிபறக்கத்துடிப்பான் துட்டமனோபாவத்துடன் தன்னைத் துடிக்கச்செய்தோரை, பழிவாங்கத் துடிப்பான்!

துடிப்பு—துயரக்குழியில் வீழ்த்துமேயொழிய, விளைவு பயனைத் தந்துவிடாது! துரதிர்ஷ்டவசமாக, தொழிலாளர் வாழ்வை நிமிர்க்க எண்ணி பாடுபடும் தொழிலாளர் கட்சிகளில் ஒருசில அரசியலை மனதில் வைத்து, தொழிலாளியின் துடிப்பை அதிகமாக்கி, துயரநிகழ்ச்சிகளைச்சிருஷ்டித்துக் கொண்டிருக்கின்றன!

வயலில் புயல்! ஆலைகளில் எரிமலை!—வளரும் உரிமைபபோரின் அறிகுறிகள். ஆனால் இந்த அறிகுறிகளை வைத்து ஆபத்துப்பாதையில் இழுத்துச்செல்கின்றனர், உழைப்போர் உலகின் முக்கிய பகுதியினராகிய

விவசாயிகளையும், ஆலைத்தொழிலாளர்களையும்!

விளைவு, சர்க்காரின் துப்பாக்கிக்குத் தொழிலாளர்களின் மார்புகள் பலியாக்கப்படுகின்றன! பழி வாங்கும் பாதையைப் பெரிதாக்கிப் படுகுழியில் போய்விழச்செய்கிறார்கள்!

நாடெங்கும் இதன் காரணமாகத் தினசரி குத்து, வெட்டு, கொலை, கொள்ளை -பலாத்காரம் தன் கோர வாயைத் திறந்துகொண்டு நர்த்தனமாடுகிறது சிறைக்குள் பலர், மரணப்பாதையில் பலர்,...வாழவேண்டியவர்கள் வீணாகப் பலியிடப்படுகின்றனர்!

X X X

"உழைப்போனே, உன் நிலையைப் பார், சிந்தி, 'ஏன்' என்று கேள், சக்திகளைத்திரட்டு, உரிமைப் போரில் இறங்கு, உன்னை அடிமைப்படுத்தும் அறியாமையை எதிர்த்து, ஜாதீயமுறையைத் தகர்த்து, முதலாளித்துவத்தை முறியடித்து வெற்றி காணப் புறப்படு! அவசரப்பட்டு ஆபத்துக்கு இரையாகாதே-வெண்ணெய் திரள்வதற்குள் தாழியை உடைத்துவிடாதே" என்று உழைப்பவனைப் பார்த்து அவர்களிலே நாமும் ஒரு பகுதி என்ற முறையில் நாம் நமது வேண்டுகோளைச் செய்கிறோம்!

உழைப்போர் உலகு உருவாக என்றும்போல நாம் ஈடுபடுவோம், இறுதிவரை போராடுவோம் என்று சபதம் எடுத்துக்கொள்கிறோம், உலக முழுதும் உரிமைப்போர் முரசொலிக்கும், இந்தநாளில்!

✲

பால பாடம்

7-ம் பக்கத் தொடர்ச்சி

வைத்து விற்கலாம் என்ற நிலையிருக்கும்போது, ஆலைபரசர்கள் போட்டி போட்டுக்கொண்டு, உற்பத்தியை ஒன்றுக்குப் பத்தாக அதிகரிக்கின்றனர்.

சிறிது கட்டுப்பாடோ, தலையீடோ அரசாங்கத்தால் காட்டப்படுமானால், தங்கள் இலாபம் குறையும் நடவடிக்கைகள் எடுக்கப்படுமானால், ஆலையரசர்கள் 'சண்டித்தனம்' செய்வர்.

1943-ல் துணி உற்பத்தி விலையைக் கட்டுப்படுத்தச் சர்க்கார் முயற்சி எடுத்தனர். முயற்சி எடுக்கப்பட்டதும், கடந்த ஆண்டைவிட உற்பத்தி குறைய ஆரம்பித்தது! எவ்வளவு உற்பத்தி செய்யப்படுகிறது ஒவ்வொரு ஆலையிலும் என்று தணிக்கை செய்யப்படும் நடவடிக்கை எடுத்ததும்—உற்பத்தி குறைய ஆரம்பித்தது! அதோடு, உற்பத்தி செய்யப்பட்ட பொருளில் ஒரு பகுதி மறையவும் ஆரம்பித்தது — கள்ள மார்க்கட்டில் விற்பனை செய்வதற்காக!

X X X

கொள்ளை இலாபம் வந்தபோது கொட்டிக்கொள்ளத் துடித்தனர் ஆலையரசர்கள்! இன்று இலாபம் குறையும் வழி தோன்றியதும் உற்பத்தியைக் குறைப்பதில் சிரத்தை காட்டுகின்றனர்.

போர்க்காலத்தைவிட இப்போது உற்பத்தி குறைந்திருக்கிறது—உற்பத்தி குறைந்திருக்கிறதென்றால், மக்களிடையே தேவையில்லை என்பதல்ல பொருள். தேவை இருக்கிறது எனினும், தேவைக்கான அளவு உற்பத்தி செய்யப்படவில்லை, முதலாளிகளால்!

சர்க்காரோ, வேண்டுகோள் விடுக்கின்றனர், தினசரி. ஆலையரசர்களோ முகாரி பாடுகின்றனர், உள்ளெண்ணத்தை மறைத்து! ஏழையான பிரஜையோ இரண்டுக்கும் இடையில் திண்டாடித் தவிக்கிறான்.

X X X

ஒரு சிலர் கையில், மக்களின் தேவைகளுக்கான பொருள்களைச் சிருஷ்டிக்கும் உரிமை இருக்கும் வரை, இத்திண்டாட்டம் ஏற்பட்டுக்கொண்டுதான் இருக்கும்.

தனிப்பட்டோர் கையில் மக்கள் வாழ்வை ஆட்டிப் படைக்கும் வசதியும் வழியும் இருக்கும்வரையில், இந்த இடர்ப்பாடு வளருமேயொழிய —குறைந்துவிடாது!

முதலாளித்துவ சமுதாயம் நீடிக்கும்வரை, ஏழையின் அழுகுரலுக்கு முடிவேற்பட முடியாது.

உற்பத்தி, உயர்ந்தோன் கையிலிருந்து மாறி 'எல்லோருக்கும் பொது' என்று ஆனால்தான், வாழ்வில் மகிழ்ச்சி எழும்பும்.

முதலாளித்துவம் நீடிக்கும்வரை, வேண்டுகோள் மூலமோ, தாஜா செய்தோ, உற்பத்தியைப் பெருக்கிவிட முடியாது—ஆளவந்தாரால்.

இது, இன்றைய முதலாளித்துவம், மக்களுக்குத் தந்திருக்கும் 'பால பாடம்.'

பால பாடமறியாது, 'உற்பத்தியைப் பெருக்குங்கள்' என்று உரத்துக் கூச்சலிடுவதால் பயனொன்றும் ஏற்படாது. நிலையான பயன் ஏற்பட்டு, மக்கள் வாழ்வு துன்பமில்லாச் சோலையாக மாறவேண்டுமேயானால்,

- முக்கிய உற்பத்தி ஆலைகள் தேசியமயமாக்கப்பட வேண்டும்.
- நாட்டின் பொருளாதாரத்தை நிர்ணயிக்கும் நிலையிலிருந்து முதலாளிகளை விரட்ட வேண்டும்.
- உழைப்பவனுக்கும்—மூலதனம் போட்டவர்களுக்கும் இடையேயுள்ள அடிமை – ஆண்டான் முறை ஒழிக்கப்பட வேண்டும்.
- தேவைக்கே பொருளுற்பத்தி, இலாபத்துக்கல்ல என்ற நிலை அரும்பவேண்டும்.

★

காரணம்!

பிறப்பினாலேயே ஒரு மனிதன் தாழ்ந்தவன் எனக் கருதி, அவனைக் கோயில் முதலானவற்றுக்குள் செல்லக் கூடாதெனத் தடுத்துவிட்டு, குறைந்த கூலிக்கு அவன் உழைப்பை உறிஞ்சி— மனிதர்கள் யாவரும் சமம்தான் இம்மையிலும் மறுமையிலும் இன்பம் கிடைக்கும் உனக்கு என்று இதோபதேசம் செய்துவிட்டால் போதுமா? அவன் அடங்கத்தான் செய்வானா? ஆகவேதான், ஜாதிமுறை தலைவிரித்தாடும் சென்னையில் பொதுவுடைமைப் பலம் அதிகமாகயிருக்கிறது!

—நார்மன் கிளிவ்.

✲

சோலை இங்கு; தென்றல் அங்கு!

துறைமுகங்கள் — வாணிபம் வகையுடன் நடைபெற வழிதரும் 'வாய்க்கால்கள்!' ஒரு நாட்டின் வளம் குறித்துக் கூறும்போது அந்நாட்டின் வியாபார மார்க்கங்களையே முக்கியமானதாகக் குறிப்பிடுவர்.

உள்நாட்டில் விளையும் பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும், தேவையான பொருள்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யவும் இன்றியமையாதனவாயிருப்பவை, துறைமுகங்கள்.

துறைமுகச் செல்வம்—திராவிடத்துக்கு இயற்கை தந்த பரிசு! கடல் வாணிபம் நடாத்தி, நாவாய் பல ஓட்டி, தனது புகழ் நாவலந்தீவு மட்டுமின்றி ரோமாபுரியிலும், சிங்கைமாநாகரிலும்; சீனத்துத் தெருவிலும் பரிமளிக்க வாழ்ந்த காலம் ஒன்றிருந்தது, திராவிட நாட்டுக்கு!

ஆனால் இன்று...? பதில்,வேதனைமயமானது.

இந்திய உபகண்டத்திலிருக்கும் துறைமுகப் பட்டியலையும் திராவிடத்தின் துறைமுகங்களையும் கீழே தந்திருக்கிறோம். வியாபாரம் நடாத்தி, வேண்டியவைகளைப் பெற்று, தனித்துத் திகழும் நிலையில் எவ்வளவு வசதி பெற்றவர்களாகயிருக்கிறோம் என்பதை எடுத்துக் காட்டுவதற்காக.

இயற்கை,— மூன்று பக்கங்களிலும் திரைகடலை நமக்குத் தந்திருக்கிறது. எனினும் நாம் திசைதெரியாதவர்களாயிருக்கிறோம், தேய்ந்த நிலவாகிக் கொண்டிருக்கிறோம், வாழ்க்கையை இழந்துகொண்டிருக்கிறோம்!

சென்னை
கோல்லம்
மசூலிப்பட்டினம்
கள்ளிக்கோட்டை
பிம்பிலிப்பட்டினம்
காகிநாடா
விசாகப்பட்டினம்
கோச்சி
கடலூர்
தனுஷ்கோடி
காரைக்கால்
மங்களூர்
நாகப்பட்டினம்
புதுச்சேரி
தெல்லிச்சேரி
தூத்துக்குடி
ஆலப்புழை

மொத்தம் பதினேழு துறைமுகங்கள் இருக்கின்றன, திராவிடத்தின் எல்லைக்குள். வேதாரண்யம் போன்ற, முயன்றால் நல்ல துறைமுகங்களாக ஆக்கக் கூடிய பல கடல் சார்ந்த பட்டினங்களும் இருக்கின்றன. இத்தனை துறைமுகங்கள் நம்மிடம். இதோ, ஏனைய இந்தியத் துறைமுகங்கள்!

பம்பாய்	பேடி
கல்கத்தா	பவநகர்
கட்டாக்	கோபால்பூர்
கோவா	ஒஹா
போர்பன்பார்	பூரி
சூரத்	

திராவிடம், தவிர்த்து ஏனைய இந்தியப் பிரதேசத்திலிருப்பவை மொத்தம் பதினொரு துறைமுகங்கள்தான்!

வெளி நாட்டு வர்த்தகத்துக்கு இன்றியமையாத பெரிய துறைமுகங்களாயிருப்பவை மொத்தம் ஐந்து எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. ஐந்தில்—மூன்று திராவிடத்தின் துறைமுகங்கள்தான்! இந்தியாவில் நடைபெறும் வெளிநாட்டு வர்த்தகத்தில் ஏழில் ஐந்து பங்கு கல்கத்தா, பம்பாய், சென்னை, கோச்சி, விசாகை ஆகிய துறைமுகங்களில்தான் நடைபெறுகின்றன!

இயற்கை, இவ்வளவு வளத்தையும் வசதியையும் நமக்களித்திருக்கிறது. எனினும் ஏமாந்துகொண்டேயிருக்கிறோம். 'எப்படி வாழ்வது தனியாகப் பிரிந்து!' என்று நமது சகோதரர்களில்கூட , சிலர் சஞ்சலத்தோடு பேசுகின்றனர்!

சந்தேகத்தோடு கேட்கின்றனர், "பிரிக்கவேண்டும் என்று முழக்கமிடுகிறீர்களே! பிரித்தால் எப்படி வாழ்வது? வியாபாரம் ஒரு நாட்டின் இன்றியமையாததல்லவா? வடநாடுதானே அதற்கு அருகதையுள்ளதாகயிருக்கிறது, அங்கிருந்துதானே வர்த்தகம் நடைபெறுகிறது" என்று! உண்மைதான், வர்த்தகம் வளர்ந்திருக்கத்தான் செய்கிறது—வடநாட்டில்! காரணம், வளம் நிறைந்தது என்பதாலோ, தென்னாடு வறண்ட பாலையென்பதாலோ அல்ல! வளம் இங்கு இருக்கிறது, ஏராளமாக; — ஆனால் — வழிதான இல்லை, அவை வளர!

வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படும் மூலப் பொருள்களில் முக்கியமான பல தெற்கிலிருந்துதான் செல்கின்றன!

துறைமுகங்கள் நிரம்பிய தென்னாடு சோர்ந்து கிடக்கிறது-தொழில் வளமில்லாததால்! ஏராளமான துறைமுகங்களிருந்தும், வெளிநாட்டு வர்த்தகம் கொழிக்கும் வகையிருந்தும், 'ஏழை'யாக இருக்கிறது!

துறைமுகங்கள் — திரைகடல்— இயற்கை நமக்குத் தந்திருக்கும் பரிசு! எனினும், நாம் இயலாதவர்களாகயிருக்கிறோம்-தொழில் துறை வளராத நாடாகயிருக்கிறது, நமது நாடு! வறுமைப்புயல் வீசுகிறது நம்மிடை, தென்றல் பவனி வருகிறது அங்கு! சோலையிருக்கிறது, இங்கு; எனினும் துன்பம் தீர்க்கும் தென்றல் வீசுகிறது இங்கல்ல, அங்கு! இது ஏன்?—பதில் தரவேண்டாம், உங்கள் இதயத்தையே கேளுங்கள். 'இந்நிலை நீடிக்கலாமா?' என்ற கேள்வி எழும்பும்

★

தொடர்கதை

மனப் போர்

தில்லை வில்லாளன்

பொழுது விடிந்தது. வடிவாம்பாள் எதுவும் தெரியாதவளாகத் தென்பட்டாள். முகுந்தன் மனதில் மட்டும் துரோகம் உதைத்துக் கொண்டே இருந்தது. சகுந்தலை அவனை ஓரக் கண்களாலேயே பார்த்தாள். இரவு அழுதகண்ணீர் கோடு கோடாக அவள் கன்னங்களில் தெரிந்தது. வடிவாம்பாள், தாயைக் காணாத ஏக்கத்தால் அழுதிருக்கிறாள் என்று எண்ணிக்கொண்டாள். சகுந்தலைக்கல்லவா தெரியும்.....இரவிலே ஒரு இன்பக் கொள்ளை நடந்தது என்று! பாவக்கூட்டுறவு ஏற்பட்டுவிட்டது என்பது உண்மை! பாவத்தைச் செய்தாள், பாவம் என்று தெரிந்து கொண்டே! பரிதாபம்!!

காலையுணவைமுடித்துக்கொண்டு அவர்களை மதுரை வண்டியிலேற்றி விட்டான். வடிவாம்பாள் கையெடுத்துக்கும்பிட்டாள்......தன்னலங்கருதாத பேருபகாரி, தங்கமனது படைத்த தம்பி, இரக்க உள்ளங் கொண்ட இலட்சியவாதி, நேர்மையிலே நாட்டமுள்ள வாலிபன், நீதியிலே நம்பிக்கையுள்ள இளைஞன், ஏழைகளின் தோழன், அனாதைகளின் ஆதரவாளன், திக்கற்றவரின் தக்கதுணை...இப்படிப்பட்ட வார்த்தைகளில் அவள் அவனைப் புகழ வில்லை. ஆனால் இந்தக் கருத்துள்ள சொற்களை அவளது இயற்கையான தமிழில் சொல்லி வாழ்த்தினாள். சகுந்தலை கொஞ்சம் சிரிப்பும், முழுக்க, முழுக்க அழுகையோடும் அவனைப் பார்த்தாள். வண்டி நகர்ந்தது.

காபியில் 'காபின்' என்ற நஞ்சிருக்கிறது என்று தெரியும். ஆனாலும் குடிக்கிறோம். செங்கல் பொடியினாலும், சாம்பல் தூளினாலும் பல் விளக்கினால் தீது என்று பாடஞ் சொல்லும் விஞ்ஞான ஆசிரியர்கூட அந்தச் சாம்பலினால் பல் துலக்குகிறார் சமயங்களில்! அதுபோலத்தான் பாவமும்! கொலை செய்வது பாவம், ஆனால் நம் குல 'தெய்வங்களின்' கைகளிலே உள்ள ஆயுதங்களைப் பார்த்தாலே குலை நடுங்குகிறது, பொய் சொல்வது பாவம், ஆனால் பொய்யைச்சொல்லிக் கலகம் விளைவிப்பதே தொழிலாகக் கொண்ட திரிலோக ஞானி நாரதர் நம் தொழுகைக்கு உரியவர்! காமம் ஆகாது நமக்கு, ஆனால் பர்ணகசாலை நுழைவதே கொள்கையாகக் கொண்ட இந்திரன் நமக்குக்கடவுள். சூதாடுவது குற்றம் இங்கு, சூதாட்டத்தில் மனைவியையும் வைத்துத் தோற்றதாகக் கூறும் கதை நமக்கு இதிகாசம். குடிப்பது இங்கு கூடாத செய்கை, ஆனால் குடிப்பதே குலதர்மம் என்று கொண்ட தேவர்கள் நமக்கு உயர்ந்தவர்கள்......என்ன விசித்திரம்!

முகுந்தன் சகுந்தலைக் கதையைச் சொல்லிப் பாவத்தின் நிலைமையை விளக்கினான். நீலனும், சேரனும் சிந்தனையிலாழ்ந்தனர்.

பிறகு ஊருக்குப் புறப்பட்டனர். அதே வண்டியில் முகுந்தனும் வந்தான். அவர்கள் கல்லூரிக்கு வந்து சேர்ந்தனர்.

ஒரு மாதிரிதானே!

மறுநாள் நீலன், சேரன் அறையில் நுழைவதற்கு முன்னாலேயே சேரன் திருத்தாண்டவமாடினான்!

"போவோம் புறப்படு, மதுரைக்கு ...."

"அறுபத்துஐந்தாம் திருவிளையாடல் புரியவா?"

"ஆமாமப்பா, பாக்கியம் வரச்சொல்லி எழுதி விட்டாள். அவளது தோழி வில்லியின் வீடாம் மதுரையில்............நான் சந்திக்க வேண்டும் என்று அன்பின் மீது ஆணையிட்டு அழைத்திருக்கிறாள். நான் கட்டாயம் போகவேண்டும்!"

வில்லி......நீலனை வரவேண்டாமென்று எழுதிவிட்டாள். அவள் வீட்டில் பாக்கியமிருக்கிறாள். சேரனுக்கு அழைப்பு விட்டுவிட்டாள். நீலன் முகம் சிறிது வாட்டமடைந்தது!

"அதுசரி...இது ஐந்தாம் ஆண்டு என்பதை மறந்து விட்டாயா? அலமாரியிலே அறிவு மூச்சு விட்டபடியே நம்மைப் பார்த்துச் சிரிக்கும் பேராசிரியர்களைக் கேள்...வின்சண்ட்ஸ்மித், டன்னிங், மன்ரோ, சர்க்கார், சர்தேசாய், எட்மண்ட் பர்க், மெயிட்லண்டு......இவர்களை வேண்டிக்கொள். அவர்கள் உத்தரவு கொடுத்தால் போ......பாக்கியத்தோடு கொஞ்சிக் குலவு"

"இந்த ஆண்டையே ஒத்திப் போடலாம். ஆனால் காதலைத் தள்ளி வைக்க முடியுமா?"

"அப்படியானால் போப்பா, போ ......உடனே புறப்படு!

"நீயும் வாயேன்...இரண்டு தினங்களில் திரும்பி விடலாம்!"

நீலன் முகம் இன்னும் கடூரமாக மாறிற்று. அவன் வருவதா......மதுரைக்கு! வருகிறேன் என்று எழுதியும் வராதே என்றாளெழுதிவிட்டாளே வில்லி!

"வெனிஸ் வியாபாரி கதையிலே வரும் மாப்பிள்ளைத் தோழனுக்கு மணம் நடப்பதைப் போல......வம்புகள் வந்து சேரவேண்டுமா? நான் ஒரு ஏக்கத்தைக் கட்டிக்கொண்டு அழ வேண்டுமா? நான் வருகிறேன் இரயிலடி வரையில்........"

தன் மனநிலையை வெளிக்காட்டாமல் மறைக்க இந்த வார்த்தைகளால் வேடிக்கையை அழைத்தான்!

நீலன் தன் தோழனை அனுப்பி வைத்தான். திருச்சிவரை எந்த வகையான இடையூறுமின்றித் தூங்கியபடியே சென்றான். திருச்சியிலே இறங்கி மதுரை வண்டியைப் பிடித்தான். அங்கு ஒரு வாலிபன் உட்

கார்ந்திருந்தான். அவன் தலையைப் பற்றிக் கவலை பட்டதாகவே தெரியவில்லை; அவையெல்லாம் அகத்தியர் கூட்டம் போலவே கிடந்தன! அவன் கண்களில் மஞ்சள் படிந்த ஒருநிறம் ......அது பார்க்கவே ஒரு வகையான உணர்ச்சியைக் கொடுத்தது! அவன் சட்டையைப் பற்றியோ கீழே அணிந்திருந்த 'பைஜாமா' வைப் பற்றியோ சிந்திக்கவே இல்லை போலும்! அழுக்கேறி ஆட்சிபுரியும் அந்த மஞ்சள் நிறச் சட்டைக்கு பொத்தானும் இல்லை. வெள்ளைக் கால் சட்டை கருப்பைக் கடன் வாங்கியிருந்தது. அவன் பக்கத்திலேஒருபை...அது நிறையத்துணி மணிகள்! அவன் கையிலே ஒரு 'சிகரெட் டின்' இன்னொரு தீப்பெட்டி. எப்பொழுமே புகைப்பான் போலிருக்கிறது! ஒரு வெண் சுருட்டுக்கு நெருப்புக் கிடைத்துவிட்டால் பிறகு தீப்பெட்டிக்கு வேலையில்லை......ஆம் அவன் நிறுத்தாமல் ஒன்றுமாற்றி யொன்றாக எடுத்துப் புகைத்துக் கொண்டிருந்தான்! அவன் பக்கத்திலே போய் தன் பெட்டியைவைத்து விட்டு உட்கார்ந்தான் சேரன்; வண்டி நகர்ந்தது. அருகிலிருந்த வாலிபன் தானாகவே பேசினான்.

"எனக்குப் பைத்யமாம்...பிரதர் ......என் பெற்றோர்கள் நினைக்கிறார்கள். நண்பர்கள் அப்படிச் சொல்கிறார்கள்.

சேரன் ஆச்சரியப்பட்டான்.

"நீங்கள் சொல்லுங்கள்......நான் பைத்யக்காரனா?"

"................"

"ஏன் பேசாமலிருக்கிறீர்கள்! நீங்களும் அப்படியேதான் நினைக்கிறீர்களா?"

சேரனுக்கு அந்த வாலிபன் பேச்சுகள் வியப்பையே தந்தன. அவன் மேலும் மேலும் பேசவே அவன்ஒரு வேளை கொஞ்சம் 'மாதிரிதானோ' என்று எண்ணினான். ஆனால் அதைத் திடமாகவும் சொல்ல முடியவில்லை. ஆகவே, அந்த வாலிபனைப்பற்றி அறிந்துகொள்ள வேண்டும் என்று விரும்பினான்.

"நண்பரே......நான் அப்படி நினைக்கவில்லை!" என்றான் அழுத்தமாக.

"உலகத்தில் எத்தனை இங்கர்சால்கள் இருந்தார்கள்? ஒருவர்தானே! அறிவாளிகள் எண்ணிவிடக் கூடியவர்கள். நீங்களும் அதில் ஒருவர்..."

அவன் இப்படிப் பேசினான்.

"நீங்கள் எங்கேபோகிறீர்கள்...?"

சேரன் கேள்வி.

"நான் மதுரைக்குப் போகிறேன்......"

"அடடா, நானும் அங்கேதான் போகிறேன்"

"அப்பொழுது இருவரும் நெருங்கிவிட்டோம்"

பிறகு கொஞ்சநேரம் அமைதி... இருவரும் பேசவே இல்லை.

"மதுரையில் என்ன வேலை...?"

"எனக்குப் பிடித்திருக்கும் மனக் குழப்பத்திற்கு மருந்து சாப்பிட வேண்டுமாம். அங்கு 'டாக்டர்' நாரணன் என்பவர் மகா மேதாவியாம்... அவரிடம் போகச் சொல்லிக் கட்டாயப்படுத்தினார்கள். ஆகவே புறப்பட்டேன். ஆனால் 'டாக்டரை'ப் பார்க்க அல்ல, வேறொருவரை...என் மனச் சுழற்சியை மாற்றவல்ல ஒருவரை!"

"'டாக்டரி'டம்காண்பிப்பதில் குற்றம் ஒன்றுமில்லையே......"

"குற்றமில்லை 'பிரதர்', எனக்கு மருந்திருக்கும் இடமேதெரியும். அதனால்தான் மதுரைக்குப் புறப்பட்டேன்."

"எனக்குப் புரியவில்லை!"

"ஒரு பெண்ணின் இதயத்தை ஆளும் அரசனாக விரும்புகிறேன். அவள் என் இதயத்தின் அரசியாக இருக்கச் செய்ய எண்ணுகிறேன். அவள் காதலை மட்டும் பெற்றுவிட்டால் பிறகு பிச்சைக்காரனாகத் திரிந்தாலும் கவலைப்படமாட்டேன்...... இது என் குறிக்கோள் 'பிரதர்'"

"ஆம், அதற்காக......"

"பைத்தியமானேன்......"

அந்த வாலிபன் பிறகு தன் வாழ்க்கை வரலாற்றை விரிவாகச் சொன்னான். அவன் பெயர் வேலன். அவன் வில்லி என்ற பெண்ணைக் காதலித்தானாம். ஆனால் அந்த எண்ணத்தை, விருப்பத்தை, காதலை... மூடி மூடிவைத்தானாம். நெருப்பைத் துணியில் மூடுவது போலவே அவன் முயற்சி வீணாகிவிட்டது. அது மட்டுமா? காலங் கடத்தியதால் அந்தக் கிளி பறந்துவிட்டது! மற்றொருவன் கையிலே சிக்கிவிடுவது போலவும் தெரிந்தது......இருப்பினும் அவன் அவளைப் பிரியமுடியவில்லை. சாவை அவன் வரவேற்கத் தயார். ஆனால் பிரிவை அவனால் தாங்கமுடியவில்லை. நெருப்பிலே இறங்கத் தயங்கவில்லை. ஆனால் குளிரோடை போன்ற அவள் கண்களை மறக்கவே முடியாது இந்த உலகத்தையே விட்டோடிவிடக்கூடிய முறையில் ஒரு தண்டனையிருந்து, அதைச் செய்யவும் சாத்தியமானால் அதை ஏற்கவும் அவன் பயப்படவில்லை. ஆனால் அவள் முத்துப் பல் வரிசையின் ஒளிச் சிரிப்பை இழக்க முடியாது. ஆம், அவன் தன் உயிரை அவளிடம் குடியேற்றிவிட்டான்! பிறகு உயிரைப் பிரிந்து அவன் இருக்க முடியுமா?

அவளை மறக்க அவன் மேற்கொண்ட செயல்கள்......அப்பப்பா பாவக்கறை படிந்தவை; உலகு உகந்ததல்ல என்று ஆண்டு பலவாய் உபதேசித்தவை; நல்லோர், பெரியோர் தள்ளிவைத்தவை! ஒரு பாவையை மறக்க அவன் பாவியானான்...பாவத்தைச் செய்தும் அந்தப் பதுமையை அவனது உள்ளக் கோவிலிலிருந்து வெளியேற்ற முடியவில்லை. புகை பிடித்தலை எவ்வளவு கேலியாகப் பேசியிருப்பான். அவன் குடும்பத்திலேயே யாருமே அந்தப் பழக்கத்தை மேற்கொண்டவர்கள் கிடையாது. அந்தப் புகை தரும் சூட்டினால் அந்தக் குளிர் பனி நினைவை உருக்கி வெளியில் ஓட்டி விடலாம் என்று பார்த்தான், முடியவில்லை. மதுவிலக்கு என்று மகான்கள் பேசுகிற நேரத்தில், மங்கையின் நினைவை மறக்கடிக்கக் குடித்தான்... குடித்தேவிட்டான்! குமரி மோகத்தால் குடியனானான். கண்ணாடிக் கோப்பைகளின் விளிம்புகளில் தன் உதடுகளைப் பதித்து அவளது உணர்ச்சி வெடிப்புகளை, மாதுளை பிளப்புகளை மறக்க மகேந்திரஜாலம் பண்ணினான். முடிந்ததா? தோற்றான். போதையிலே தன் நினைவை ஆழ்த்தி அந்தப் பெண்ணணங்கின் எண்ணத்தை விரட்டி விடலாம் என்று திட்டமிட்டான். போதையிலும் அவள் பெயரையே உளறினான். கடைசியாகக் 'கலவிக்கடை' வரையிலும் சென்றான். ஆனாலும் வில்லி...அவன் கட்டிய இன்பக் கோட்டையின் எழிலரசி...இலட்சிய நல்லாள்...அவனை வாட்டிக் கொண்டே இருந்தாள். ஆகவே கடைசியாக அவள் அவனை பித்தனாக்கிவிட்டாள். ஊரார் பித்தன்

என்று சொல்கிற அளவு காதல் வேகத்தில் தன்னை மறந்தான்...!

"லில்லியென்றால் யார்?"

"அவள் இப்பொழுது ஒரு 'டைப்பிஸ்ட்.' அவளது தந்தை ஒரு வழக்கறிஞர். அவர் பெயர் டேவிட்"

"நண்பரே, நாம் இருவரும் ஒரு பாதையிலே பயணஞ் செய்கிறோம். நீர் லில்லியைத் தேடுகிறீர். நான் லில்லி வீட்டிலே தங்கியுள்ள அவளது தோழி பாக்கியத்தை நாடிச் செல்கிறேன். நாம் ஒரு பட்டியலிலே பெயர்ப் பதிவு செய்து கொள்ள வேண்டியவர்கள்!"

வேலன் மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தான்.

சிக்கல்

சேரன் அவனுடன் மிகவும் நெருங்கிய நண்பனைப் போலவே பழகத் தொடங்கிவிட்டான்.

"நண்பரே, காதல் என்றால் என்ன?"

"புயற் காற்றிலே சிக்கிய வர்ணக் காற்றாடி!"

"மணம் என்பது......"

"அது ஒரு செய்தி இலாக்கா!"

பாக்கியம் முதலில் அந்தச்செய்தி இலாக்காவின் மூலம் உலகத்துக்கு அவர்கள் இருவரும் உரிமைப்படுத்தப்பட்ட துணைவர்கள் என்று சொல்லிவிடச் சொல்கிறாள். பிறகு எந்த வகையான உரிமையோடு இடும் கட்டளைகளையும் அவள் நிறைவேற்றுவதாகச் சொல்கிறாள். ஆம், தன்மீது பழிவரக் கூடாது என்ற ஒரே நோக்கத்தோடு அப்படிக் கூறினாள். அதுதான் நேரான வழி. ஆத்திரம் அவனை அப்படி ஆட்டிவைக்கிறது. சகுந்தலையின் கதி—இலக்கியச் சகுந்தலை கிடக்கட்டும்—முகுந்தன் சொன்ன சகுந்தலையின் முடிவு அவளுக்கு வரலாமா?

வேலனும் லில்லியை உடன் மணக்கத்தான் விரும்புகிறான். அவன் வேறு சாதி, மதம்...அவள் வேறு மதத்தவள்! அப்படியிருந்தும் எதிர்ப்பை எண்ணாமல், சமூகத்தின் சாபத்தைப் பொருட்படுத்தாமல் அவன் துடிக்கிறான். ஆனால் சேரன் ...தன் சாதியைச் சேர்ந்த பெண்ணை மணக்கத் தயக்கமேன்? தவக்கம் எதனால்...? பாக்கியத்தை அவன் விரும்புவது உண்மையானால், அவளிடம் காதல் கொண்டிருப்பது உறுதியானால் உடனே மணத்தை முடிக்கவேண்டும். பாக்கியத்திடம் அடக்கமுடியாத காதல் கொண்டு விட்டான். அதுவும் அவளது மன அடக்கத்தை எண்ண எண்ண அவன் காதல் தீ கொழுந்துவிட்டு எரிந்தது...

ஆனால், அவளுடைய தந்தையை எப்பொழுதுமே அவனுக்குப் பிடிப்பதில்லை. அவர் தாழ்ந்த குலத்திலே பிறந்ததற்காக வருந்துவார். ஆனால் அதைத் திருத்த முனைவதில்லை. திருத்துவோரையும் வெறுப்பார். அவர் தன் உயர்வையே பெரிதாகக் கருதுவார். தன் இனத்தின் இழிவைத் துடைக்க எண்ணமாட்டார். அவர் படித்தவர். பட்டம் பெறாவிட்டாலும், பட்டம் பெற்றவர்களை விடக் கெட்டிக்காரர்! அதுவரை மகிழ்ச்சிதான்......ஆனால் அந்தப் படிப்பைத் தன் உடன் பிறந்தவர்கள் உயரப் பயன்படுத்தினால் எவ்வளவோ சிறப்பாக இருக்கும்! அதை அவர் செய்யவில்லை. அவர் அந்தக் குலத்தில் பிறந்ததாகச் சொல்லிக் கொள்ளவே வெட்கப்படுவார். சமூகம் சொல்கிற குற்றச்சாட்டை அவர் ஒப்புக் கொள்கிறார் என்று அர்த்தமா...அவர்கள் பாவிகளா? தீண்டத்தகாதவர்களா? அதை எதிர்த்துப் போராட அவர் ஏன் எண்ணவில்லை? பாக்கியத்தின் தந்தை பரமன் இந்தப் பிறந்த மண்ணிலே வாழவும் கூசி மலேயாவுக்குச் சென்றுவிட்டார். அங்கு பெரும் பணக்காரனாகவும் ஆகிவிட்டார். இந்தியாவில் தன் மகளைப் படிக்கச் செய்தார். சேரனின் தந்தை வீரனோ பரமனுக்கு நேர் எதிர்மாறு......! தன் இன முன்னேற்றமே தனது முன்னேற்றம் என்ற கொள்கையுடையவர். இவர்கள் எப்படி ஒத்துப்போக முடியும்? பெண் கேட்டுப் பெற்று 'சம்பந்தம்' போட முடியுமா? அது நல்ல முறையில் நீடிக்குமா?

சேரனின் பெற்றோர்கள் அவன் விருப்பத்திற்கு மாறாக எதையும் செய்யமாட்டார்கள். ஆனால் அவர்கள் என்ன கோட்டை கட்டியிருக்கிறார்களோ......யார் கண்டார்கள்? இதைப் போய்ச் சொன்னால் திடுக்கிட்டுப் போய்விட மாட்டார்களா? சேரனைப் படிக்கவைக்க அவர் எவ்வளவு தியாகம் செய்கிறார்...எவ்வளவு பொருட் செலவு...அவரை எப்படி எதிர்ப்பது? அவருக்கு நிச்சயமாக பரமனின் கூட்டுறவு பிடிக்காது! ஆனால் அவன் விருப்பத்திற்கு எதிரிடையாகப் போகக் கூடாது என்பதற்குப் பரமனிடம் சென்றாலும் அவர் எதிர்த்தே பேசுவார்......இணங்கமாட்டார்! அப்பொழுது என்ன செய்வது? பாக்கியம் பார்த்துக் கொள்வாளா? அவள் முயற்சி செய்து இதற்கு ஒப்புக்கொள்ளச் செய்வாளா? காதலுக்காகக் காட்டையும், மேட்டையும் கடந்து நாட்டையும், வீட்டையும் துறந்து, உற்றார், பெற்றாரை மறந்து நின்றவர்களின் கதைகளை நாம் படித்திருக்கிறோம்! ஆனால் ஒரு தந்தையின் கல் மனதைத் தன் கண்ணீரால் கரைக்கமாட்டாளா ஒரு பெண்! நிச்சயமாகச் செய்வாள். ஆம், பாக்கியத்தைச் சந்தித்தவுடன் இந்தச் சிக்கலைச் சொல்லி உடனே அவளின் தந்தைக்கு எழுதச் சொல்ல வேண்டும்!

காகிதக் காதல்

வேலன் மீண்டும் தொடர்ந்து பேசினான். அவன் கடைசியாகத் தன் விழைவை ஒரு கடிதம் மூலம் தெரிவித்தானாம். அத்தோடு அமரன் எழுதிய 'மனப்போர்' என்ற அழகிய கற்பனைச் சித்திரத்தையும் அனுப்பிவிட்டானாம்... விடையில்லையாம்! அவள் ஏன் விடை யெழுதவில்லை? அவனை விரும்பவில்லையா? அல்லது வேறு எவனையாவது காதலிக்கிறாளா? அல்லது யோசிக்கிறாளா? செத்த மௌனத்திற்குக் காரணம் சினமா, வெறுப்பா...வேறு காரணமா?

(தொடரும்)

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravida Nadu" Press
95, Tirukkachinambi Street Kancheepuram.